# විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

# ශ්‍රී ලංකාව

# තිස් හතරවැනි වාර්ෂික වාර්තාව

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# இலங்கை

# முப்பத்தி நான்காவது வருடாந்த அறிக்கை

# UNIVERSITY GRANTS COMMISSION

# SRI LANKA

# THIRTY FOURTH ANNUAL REPORT

# 2012

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

### அறிமுகம்

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையின் உச்ச சபையாகச் செயற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 1978ம் ஆண்டு டிசெம்பர் 22ம் திகதியன்று நிறுவப்பட்டது. ப.மா. ஆணைக்குழுவின் செயற்பாடுகள், பல்கலைக்கழக கல்வியினை திட்டமிடலும், ஒருங்கிணைத்தலும், உயர் கல்வி நிறுவனங்களுக்கான (உகநி) நிதிகளை ஒதுக்குதல், கல்விசார் தரங்களை பேணுதல், உ.க. நிறுவனங்களின் நிருவாகத்தினை ஒழுங்குபடுத்தல் மற்றும் உ.க. நிறுவனங்களுக்கான மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்தல் ஆகியனவாகும்.

### ப.மா.ஆணைக்குழுவின் தூரநோக்கு

உயர் கல்வியில் சிறப்பு நிலையங்களைக் கொண்ட வலைப்பின்னல்களுக்கு வழிகாட்டி, அபிவிருத்தி செய்து நிலைநிறுத்துவதற்கான சிறந்த ஒழுங்கமைப்பு மையமாக திகழ்வதுடன், தேசிய தேவைகளையும், உலக போக்குகளுக்கு அமைவாக விருப்புக்களைப் பூர்த்தி செய்தலும்

### ப.மா.ஆணைக்குழுவின் நோக்கு

பொதுமக்களுக்கு வகைசொல்லும் பரந்தளவில் வரவேற்கப்படுவதும், அடையக்கூடியதுமான உயர் கல்வி முறைமையினை மூலவளங்களை ஒதுக்கி, நல்லாட்சி, முகாமை செய்தல் ஆகியவற்றின் ஊடாக நிறுவி, வழிகாட்டி, அபிவிருத்தி செய்தலும், நிலைநிறுத்தலும், நாட்டின் தேவைகள் தொடர்பான கற்றல், ஆய்வு, புதுமையாக்கம் ஆகியவற்றில் உயர் மட்டங்களை அடைய ஏனைய உயர் கல்வி பங்குதாரர்களுடன் இணைந்து பேணுதலும் அல்லது வசதியளித்தலுக்கு அர்ப்பணித்தலும், தேசிய, உலகளாவிய தேவைகளுக்குரிய கல்விசார் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை பல்வகைப்படுத்தலும், தரங்களையும், நியமத்தையும், தன்மையையும் பராமரித்தலும், உலகளாவிய தரங்களுக்கு ஏற்ப கற்பித்தல், ஆராய்ச்சி, புதுமையாக்கம் ஆகியவற்றின் “சிறப்பு நிலையங்களின்” வலைப்பின்னலாக முன்வர உயர் கல்வி முறைமைக்கு வழிகாட்டலுமாகும்.

## தலைவருடைய செயற்பாட்டு மீளாய்வு

1978ம் ஆண்டு நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ), 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் இலங்கையின் பல்கலைக்கழக முறைமையின் உச்ச நிலை சபையாக உருவானது. பல்கலைக்கழக கல்வியினை திட்டமிடுதலும், ஒருங்கிணைப்பதும், பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களுக்கான (உகநி) நிதிகளை ஒதுக்குதல், கல்விசார் தரங்களை பேணுதல், உயர் கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தினை ஒழுங்குபடுத்தல், உயர் கல்வி நிறுவனங்களுக்கான மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்தல் மற்றும் அதன் அதிகார எல்லைக்குட்பட்ட சகல நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திற்கும் உதவியளித்தல் ஆகியவற்றிக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பொறுப்பாகவுள்ளது.

இவ் வருடாந்த அறிக்கை 2012ம் வருடத்தில் ப.மா. ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. 2012ம் வருடத்தின் போது முக்கிய அம்சங்களாகவும், சாதனை அடைவுகளாகவும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதி, கல்விசார் சிறப்படைதல், மாணவர் விவகாரங்கள், ஆளணியினர் விருத்தி, கைத்தொழில் பிணக்குகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், தகவல் தொழில்நுட்பங்கள் (IT) அபிவிருத்தி, நியமத்தை உறுதி செய்தல், நிதி நிர்வாகமும், முகாமை செய்தலும் ஆகியன உள்ளடங்கியுள்ளன.

### பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2011ம் ஆண்டில் நடத்தப்பட்ட க.பொ.த (உ/ம) பரீட்சைக்கு பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் என இரு குழுக்களையுடைய பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தார்கள். எனவே ப.மா. ஆணைக்குழு பரீட்சைகள் திணைக்களத்துடன் ஆலோசித்து நியமித்த நிபுணர்கள் குழு இஸட் புள்ளிகளைத் கணிப்பதற்கும், அம் மாணவர்களை சிறப்புத் தேர்ச்சி முறையில் நிரல்படுத்தி அவர்களின் சிறப்பு வரிசையினைத் தயாரிப்பதற்கும் அவ்விரு மாணவ குழுக்களையும் ஒன்றினைப்பதற்கு சிபாரிசி செய்து ஆலோசனை வழங்கியது.

ஆயினும், பரீட்சை பெறுபேறுகள் வெளியானவுடன், இத் தீர்மானத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டதால், பல்கலைக்கழக சட்டத்தின் 15(vii) பிரிவிற்கு இணங்க பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் ஆகியவற்றை இரு தனிப்பட்ட தொகுதிகளாகக் கருதி, சகல மாணவர்களுக்கும் இஸட் புள்ளிகளை மீண்டும் வெளியிடுமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு பணிப்புரை வழங்கப்பட்டது. ஆயினும், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு சிறப்பு ஒழுங்கின்படி பட்டியலைத் தயாரிப்பதற்கான முறை இத் தீர்ப்பில் விசேடமாக குறிப்பிடப்படாததால், அதிமேன்மைதகு ஜனாதிபதியினால் மாணவர்களை நிரல்படுத்துவதற்கான முறையொன்றினை முன்மொழிவதற்காக நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் ஆகியவற்றை இரு தனித் தொகுதிகளாக் கருத்திலெடுத்து கணிக்கப்பட்ட இரு கூறுகளின் இஸட் புள்ளிகளையும் ஒன்றினைத்து அவைகளை இறங்கு ஒழுங்கின்படி நிரல்படுத்தி, ஒரே கூறான இஸட் புள்ளிகளை வகுக்க இக் குழு சிபாரிசி செய்தது.

ஆயினும், 2வது சிறப்பு பட்டியலையும் ஆட்சேபித்து எட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான சிறப்பு பட்டியல், இரு குழுக்களின் பரீட்சார்த்திகளையும், இரு தனித் தொகுதிகளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தினை உயர் நீதிமன்றம் கொண்டிருந்ததால், இரு பகுதியாரும் கௌரவ சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து தகுந்த தீர்வொன்றினை அடைவதற்கான அனுமதியை வழங்கியது.

இவ் விடயத்தினைத் தீர்க்கும் பொருட்டு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நான்கு மாற்று முறைகளைத் தயாரித்து முன்வைத்தது. இவற்றின் மூன்றாது முறையினை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இம் முறையின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் வீதம், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து முதல் முறை தோற்றும் பரீட்சார்த்திகளினதும், சென்ற ஐந்து வருடங்களின் போது பல்கலைக்கழகங்களுக்கு ஒவ்வொரு பாடநெறிக்கும் அனுமதிக்கப்பட்ட மீள்பரீட்சார்த்திகளினதும் உயர் மட்ட வீதத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும். இம் முறையினை மேற்கொள்ளும் போது, இவ் வருடத்திற்கு உள்வாங்க முன்மொழியப்பட்ட 21,500 மாணவர்களுடன், மேலதிகமாக 5,609 மாணவர்களைத் தெரிவு செய்யவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்கு எதிர்பார்க்கின்றது.

அத்துடன், உயர் நீதிமன்றம் முன்னர் செயல்முறை/விவேகப் பரீட்சைகளில் சித்தி பெறும் தேவைகளைக் கொண்டுள்ள கற்கை பாட நெறிகளுக்கு தொடர்ந்தும் அவ்வாறான செயல்முறை/விவேகப் பரீட்சைகளை நடத்துமாறும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு கட்டளையிட்டது. எவ்வாறாயினும் அப் பரீட்சை பெறுபேறுகள் 31.12.2012 திகதிவரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறாததால், 2011/2012 கல்வி ஆண்டிற்குரிய மாணவர்கள் அனுமதி இவ் வருட இறுதிவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

2011ம் வருட க.பொ.த. (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு 2011/2012 கல்வியாண்டிற்கான பல்கலைகழக அனுமதிக்கு விண்ணப்பிக்க மொத்தமாக 141,411 பரீட்சார்த்திகள் தகைமை அடைந்துள்ளார்கள்.

**பட்டதாரி வெளியீடு**

2012ம் வருடத்தில் மொத்த பட்டதாரி வெளியீடு 9352 ஆகும். இத் தொகையில் பெரும்பாமையாகிய 37.5% கலைப் பிரிவினாவர். 2012ன் மொத்த பட்டப்பின்படிப்பு வெளியீடு 7880 ஆகும்.

**கல்விசார் அபிவிருத்தியும், கல்விசார் தராதரங்களை பேணுதலும்**

சென்ற வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 05 நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடுகையில், ஆய்விலுள்ள இக் காலப் பகுதியில், விசேட தேவைகள் கல்வி பட்டமாணி பட்டதாரி மாணவர்கள் நிகழ்ச்சித் திட்டம், பல்கலைக்கழக முறைமைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
அத்துடன் சென்ற வருடத்தில் அனுமதியளிக்கப்பட்ட 23 நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடும் போது, 06 புதிய பட்டப்பின் படிப்பு பட்டமாணி நிகழ்ச்சித்திட்டங்கள் தகுந்த ஆய்வு, மீள்பார்வை பொறிமுறையினைக் பின்பற்றி உயர்/மேலதிக கல்வி வாயப்புக்களை விரிவாக்கும் பொருட்டு அனுமதியளிக்கப்டடது.

பல்கலைக்கழக மாணவர்களிடையே ஆங்கில மொழி தேர்ச்சியினை மேம்படுத்த, ஆங்கிலம் கற்பித்தலுக்கான நிலையியல் குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அத்துடன், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சின் உதவியுடன் கலை பீடங்களில் மும் மொழி மொழிபெயர்ப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) ஆகியவற்றில் விசேட பட்டமாணி நிகழ்ச்சித்திட்டங்களையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

மீள்பார்வையியுள்ள இவ் வருடத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் நிலையியல் குழுக்கள், தொழில் வழிகாட்டி ஆலோசகர்களுக்கு பயிற்சியளித்தல், பல்கலைக்கழக மாணவர்களின் மென்பொருள் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்தல், பல்வேறு பட்டதாரி மாணவர் நிகழ்ச்சித் திட்டங்களின் நியமங்களை மேம்படுத்தல் ஆகியவற்றிக்கான சில பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்தன.

மேற் குறிப்பிட்டவைகளுடன், பல்கலைகழக மானிய ஆணைக்குழு, HETC நிகழ்ச்சித் திட்டம், ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களான பெற்றோலிய மூலவள அபிவிருத்தி செயலகம், ஜோன் கீல்ஸ் கம்பனி ஆகியவற்றின் உதவியுடன் தேசிய முக்கியத்துவமுள்ள விடயங்கள் மீது பல ஏனைய செயலமர்வுகளையும் நடத்தியது.

இவ் வருடத்தில் 04 உயர் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படும் தெரிவு செய்யப்பட்ட பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பட்டங்கள் வழங்கும் நிலையை வழங்குவதற்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கௌரவ உயர் கல்வி அமைச்சருக்கு சிபாரிசி செய்யபட்டது.

**மாணவர் விவகாரங்கள்**

அரச பல்கலைக்கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வகிபங்கினை ஆற்றுவதற்கு மாணவர்கள் ஒத்துழைத்து, பங்களிப்பு செய்து சாத்தியமடைய ஊக்கப்படுத்தும் எதிர்பார்ப்புடனும், நிறுவனத்தின் மூலாதார பெறுமதிகளையும், கொள்கைகளையும் காப்பதற்கும், நிலைநிறுத்தவும் பங்களிக்கும் பொருட்டும், பல்கலைக்கழக மாணவர் சாசனமொன்றினை 2012ல் இவ் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவ் வருடத்தில் மஹாப்பொல பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 33,089 ஆகவிருக்கும் வேளை, உபகாரக் கொடுப்பனவு பெறுவோர் 23,446 ஆகவும், நன்கொடை கல்வி உபகாரக் கொடுப்பனவு பெறுவோர் 35 ஆகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது உபகாரக் கொடுப்பனவு பெறுவோரின் எண்ணிக்கையில் 30% அதிகரித்திருக்கும் வேளை, மஹாப்பொல பெறுபவர்களின் எண்ணிக்கை 2.5% மாத்திரமே அதிகரித்துள்ளது.

**ஆளணியினர் அபிவிருத்தி**

2012ல் மொத்தமாக 751 புதிய ஊழியர் கோப்புப் பதவிகள் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டன. இவ் எண்ணிக்கையுடன், பல்கலைக்கழக முறைமையின் மொத்த அனுமதிக்கப்பட்ட ஊழியர் கோப்புப் பதவிகள் 21,043 ஆக அதிகரித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட 751 புதிய ஊழியர் கோப்புப் பதவிகளில் 294 பதவிகள் கல்விசார் ஊழியர் கோப்புப் பதவிகளுக்கானதாகும்.

ஆய்விலுள்ள வருடத்தில், பல்கலைக்கழகங்களில் ஆளணியினர் அபிவிருத்தி நிலையங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயனளிக்கும் பொருட்டும், ஆளணியினர் அபிவிருத்திக்கான புதிய நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதற்காகவும் பல்கலைக்கழக ஆணைக்குழு அண்ணளவாக ரூபா. 65 மில்லியனை ஒதுக்கி வழங்கியது. அத்துடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கொள்கைக்கு ஏற்ப, கல்விசார் ஆட்சியிலும், கல்வி வழங்குவதிலும் சிறப்பினை அடையும் பரந்த குறிக்கோளுடன், பல்கலைக்கழகங்கள் /உ.க. நிறுவனங்களின் கல்விசார் ஆளணியினர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக விமானப் பயணங்களுக்கான நிதி உதவித் தொகையாக ரூபா. 7.046 மில்லியன் வழங்கப்பட்டது. மேலும், கல்வியியளாலர்களுக்கு உள்நாட்டு ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக ரூபா. 5.62 மில்லியன் பெறுமதியான மானியங்களும் வழங்கப்பட்டன.

**சம்பள முரண்பாடுகள் மீதான கைத்தொழில் பிணக்குகள்**

ஆய்விலுள்ள வருடத்தில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளத்தினாலும் (FUTA), கல்விசாரா ஆளணியினர் தொழில் சங்கங்களினாலும் தொழிற் சங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பல்கலைக்கழக விருவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளத்தினால் (FUTA), அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளதெனவும், அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை அலைக்களித்துள்ளதெனவும் எடுக்கப்பட்ட தொழில் சங்க நடவடிக்கை சுமார் நான்கு மாதங்களுக்குத் தொடர்ந்தன.

கல்விசார்பற்ற ஆளணியினரின் தொழில் சங்கங்களினால், அவர்களின் படிக்கொடுப்பனவு, சம்பள முரண்பாடுகளை பிரதான நோக்கங்களாகக் கொண்டு எடுக்கப்பட்ட தொழில் சங்க நடவடிக்கைகளும் சுமார் ஒரு மாதத்திற்குத் தொடர்ந்தது.

**உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

திறைசேரியினால் பலவிதமான கட்டுப்பாடுகளை விதித்தன் பின்னர், பல்கலைக்கழகங்களும், உ.க. நிறுவனங்களும் 2011ம் ஆண்டில் பெற்றுக் கொண்ட ரூபா. 4,290 மில்லியனை ஒப்பிடும் போது, இவ் வருட இறுதிவரை ரூபா. 5,504 மில்லியனை மட்டுமே பெற முடிந்தது. இத் தொகை 2012ல் புதிய கட்டட அமைப்பு, தொடரும் திட்டங்கள், புனருத்தாபன திட்டங்கள், பொருட்கள் பெறுதல், புதிதாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள், மாணவர்களின் கொள்ளலவு கட்டமைப்பு ஆகியனவற்றிக்கு பிரதானமாக ஒதுக்கப்பட்டது. இவ்வருடத்தின் போது, ஆணைக்குழு கவனமாக பரிசீலித்து, மதிப்பிட்டதன் பின்னர் 22 புதிய கட்டடமைப்பு திட்டங்களை அனுமதித்தது. 2012ம் ஆண்டில் பல்கலைக்கழக முறைமையில் ரூபா. 13,672.4 மில்லியன் தொகையான 11 பௌதீகரீதியாக ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களும், 44 கட்டட திட்டங்களும், பல்வேறு வடிவமைப்பு, கட்டடமைப்பு செயல்முறை நிலைகளில் முன்னேறுகின்றன.

அதேவேளை, மொத்த உத்தேச செலவுப் பெறுமதியான ரூபா. 2,778.3 மில்லியனைக் கொண்ட 13 திட்டங்கள் (சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது 12 திட்டங்கள்) பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமைக்கு கையளிக்கப்பட்டன.

**தகவல் தொழில் நுட்ப (IT) அபிவிருத்தி**

2012ம் வருடத்தில், பல்கலைக்கழக முறைமையின் நூலகங்களுக்குரிய தகவல், தொடர்பாடல் தொழில் நுட்ப அபிவிருத்திகளுக்காக ரூபா. 8 மில்லியன் (சுமார்) முதலீடு செய்யப்பட்டது. அத்துடன், பல்கலைக்கழக முறைமையின் தகவல் தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்தி, வலுப்படுத்துவதற்காக, சென்ற வருடத்தின் ரூபா. 15 மில்லியனை ஒப்பிடும் போது, இவ் வருடத்தில் ரூபா. 50 மில்லியன் (சுமார்) ஒதுக்கப்பட்டது.

அத்துடன், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயலகத்தின் சபை அறையினையும், நடைமுறையிலிருக்கும் தகவல் தொழில்நுட்பம் /வீடியோ கலந்துரையாடல் வசதிகளையும் மீள் சீர்செய்து, ப.மா. ஆணைக்குழுவிற்கும், பல்கலைக்கழகங்களும் இடையேயுள்ள தொடர்பாடலின் செயற்திறனை விரிவுபடுத்தும் பொருட்டு சர்வதேச தரங்களை அடைய தரமுயர்த்தப்பட்டுள்ளது.

**நியம உறுதிப்பாட்டை அங்கீகரித்தல்**

ஆய்விலுள்ள வருடத்தின் போது, நி.உ.அ. சபையின் வெளிவாரி நியம மதிப்பிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 10 நிறுவன மீளாய்வு, 07 விடய/ நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு, மற்றும் 01 நூலக மீளாய்வு, 99 பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்களின் மேசை ஆய்வுகள் (சென்ற வருடத்தை ஒப்பிடும் போது முறையே 6,13, 1 மற்றும் 47) நடாத்தப்பட்டன.

2012ல் உயர் கல்வி நிறுவனங்களின் நியமத்தை மேம்படுத்த தேசிய, பல்கலைக்கழக/ பீடங்கள் மட்டங்களில் செயலமர்வுகள் கூட நடாத்தப்பட்டன.

பல்கலைக்கழகங்களில் உள்வாரி நியம உறுதிப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்குடன் உள்வாரி நியம உறுதிப்பாட்டு கைநூல் தயாரிக்கபடும் வேளையில், அங்கீகரிக்கும் செயல்முறைகளை ஆரம்பிக்கவும், நாட்டிலுள்ள சகல (பொது மற்றும் தனியார்) உயர் கல்வி நிறுவனங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அங்கீகரிப்பதற்கு உதவியளிக்கும் அங்கீகரிப்பு கைநூலை தயாரிப்பதற்குமாக அங்கீகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

உயர் கல்வியின் நியம உறுதிப்பாட்டுத் துறையின் முக்கியமானதொரு கட்டமாக, 2012ல் வெளிவாரி நியம மதிப்பிடலுக்கான கண்காணிப்பு மற்றும் ஆய்வு முறைமையை அடிப்படையாகக் கொண்ட இணையத்தளம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

**நிதி நிர்வாகமும், முகாமைத்துவமும்**

ப.மா. ஆணைக்குழுவின் மதிப்பீட்டின் படி 2012ம் வருடத்திற்கு மொத்தமாக ரூபா. 28,363 மில்லியன் வேண்டுமென மதிப்பிடப்பட்டிருந்தாலும், திறைசேரி மீள்செலவிற்கும், மூலதனச் செலவிற்கும் ரூபா. 20,283 மில்லியனை ஆரம்பத்தில் அனுமதித்தது.

இவ்வருடத்தில், மேலதிக ஒதுக்கீடாக ரூபா. 215 மில்லியனை அதிகரித்த பாதுகாப்பு சேவை செலவிற்காக அனுமதிக்கப்பட்டது.

சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது, மீண்டெழும் செலவிற்குரிய மானியத்திற்கான ஒதுக்கீடு 12% வீதத்தால் அதிகரித்தாலும், பல்கலைக்கழக முறைமையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பாக திறைசேரியினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளினால் மூலதனச் செலவு 19% வீதத்தினால் குறைவடைந்தது.

திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட நல்லாட்சி மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகள் ஊடாக பல்கலைக்கழகங்கள் மற்றும் உ.க. நிறுவனங்களின் நிதி முகாமைத்துவத்தினை மேம்படுத்துவது தொடர்பாக உதவும் விடயங்களை ஆராய்வதற்காக ப.மா. ஆணைக்குழுவின் கணக்காய்வு நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு குழு 2012ல் 29 தடவைகளில் கூடியது.

ஆய்வு வருடத்தில், ப.மா. ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் எதிர் வரும் வருடங்களில் சுமூகமாக செயற்படுவதை நிச்சயப்படுத்துவதற்காக உயர் ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் சபையாக இவ் ஆணைக்குழுவினால் 25 ஆணைக்குழு சுற்றறிக்கைகளும், 16 தாபன சுற்றறிக்கைகளும் வினியோகிகப்பட்டன.

## 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் தலைவர், உப-தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு

**தலைவர்**

பேராசிரியர் எஸ்.வி.டி.ஜி. சமரநாயக்க
அரசியல் விஞ்ஞான சிரேஸ்ட பேராசிரியர்
பி.ஏ (பேரா) இலங்கை, எம்.ஏ (பேரா) இலங்கை, பி.எச்.டி (சென் அன்ரூஸ்)

**உப-தலைவர்**

பேராசிரியர் ரன்ஜித் சோனாரத்தன
விவசாய விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர்,
பி.எஸ்.சி, எம்.பில்., பீ.எச்.டி (வியன்னா), பீ.எச்.டி. எச்.சி (துர்ஹாம்)

**உறுப்பினர்கள்**

போராசிரியர் எச். அபேயகுணவர்த்தன
பி.வி.எஸ்.சி (பேரா) இலங்கை, எம்.எஸ்.சி & பி.எச்.டி (இல்லுயினோய்ஸ், யு.எஸ்.ஏ
பண்ணை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சிரேஸ்ட பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர். எஸ். மோகனதாஸ்
பி.எஸ்சி (சிறப்பு), பி.எச்.டி (எடிலைடி), எப்.ஐ.கெம்., சீ.கெம்
ஓய்வு பெற்ற உப-வேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

பேராசிரியர் மல்காந்தி சந்திரசேகர
உடற்கூற்றியல் சிரேஸ்ட பேராசிரியர், பி.டி.எஸ். (இலங்கை),
பி.எச்.டி(நியுகாசல், யூ.கே.)

திரு. விஜய மலலசேகர
எம்.ஏ (கன்தாப்), சட்டத்துறை பரிஸ்டர் (இன்னர் டெம்பிள்), சட்டத்தரணி

பேராசிரியர் சம்பத் அமரதுங்க
பி.ஏ. பொருளியல் (சிறப்பு) (சிறி ஜயபுர), எம்.ஏ. (பொருளியல்) (கொழும்பு)
எம்.எஸ்.சி கிராமிய அபிவிருத்திப் பொருளியல் (சக), பி.எச்.டி (ககோசிமா)

**திறைசேரியின் பிரதிநிதி**

திரு. பி.ஏ. அபேசேகர, இ.ப.சே- தரம் I
பி.ஏ. (இலங்கை) (பேராதனை), பொதுநிர்வாகம் - சான்றிதல் (எஸ்.எல்.ஐ.டி.ஏ)
கிராமிய அபிவிருத்தியில் டிப்ளோமா – என்.ஐ.ஆர்.டி (இந்தியா)
திறைசேரி பிரதிச் செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு

**செயலாளர்**

திரு. கே.ஜி.தி.எல். நந்தசேன
பி.காம். (சிறப்பு), எம்பிஏ(சிஜபு)

## 2. பல்கலைக்கழக முகாமைத்துவம்

### 2.1 கொழும்பு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
ஆதிவணக்குத்துக்குரிய அருள்திரு பேராயர் ஒஸ்வோல்ட கோமிஸ்

**உப-வேந்தர்**
பேராசிரியர் ஷானிக்கா ஹிரிம்புருகம

**பதிவாளர்**
திரு. ரி.எல்.ஆர். சில்வா (பதில்)

**2.2** பேராதனைப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
கலாநிதி பிரேமதாச உடகம (22.02.2012 வரை)
பேராசிரியர் பி.டவ்ளியூ. எபாசிங்க (23.02.2012லிருந்து)

**உப வேந்தர்**
பேராசிரியர் பி.எஸ். அபேயகூன் (31.07.2012 வரை)
பேராசிரியர்ஏ.சேனாரத்ன(01.08.2012லிருந்து)

**பிரதி துணை வேந்தர்**
பேராசிரியர் வி.எஸ். வீரசிங்க (30.11.2012 வரை)
பேராசிரியர் எச்.எம்.எஸ். ஹேன்னநாயக (01.12.2012 லிருந்து)

**பதிவாளர்**
திரு. யு.டி. டொடன்வெல (பதில்) (14.06.2012 வரை)
கலாநிதி எம்.என். ஜயவர்த்தன (15.06.2012 லிருந்து)

**2.3 களனிப் பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
ஆதி. வண. வெலமிட்டியாவே தர்மகீர்த்தி ஸ்ரீ குசலதம்மா தேரர்

**உப-வேந்தர்**
பேராசிரியர் சரத் அமுனுகம

**பதிவாளர்**
திரு. டவ்ளியு.எம். கருணாரத்ன

**2.4 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
வண. பேராசிரியர் பெலன்வில விமலரத்ன தேரா

**உப வேந்தர்**
கலாநிதி என்.எல்.ஏ. கருணாரத்ன

**பதிவாளர்**

திரு. ஜயலத் முத்தெட்டுவேகெதர (14.02.2012 வரை)
திரு. கே.ஜி. பிரிட்டோ (15.02.2012 லிருந்து)

**2.5 மொறட்டுவை பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
தேசமானி கலாநிதி எஸ். ரொலாண்ட் சில்வா

**உப வேந்தர்**
பேராசிரியர் ஏ.கே.டவ்ளியூ. ஜயவர்த்தன

**பிரதி துணை வேந்தர்**
பேராசிரியர் என்.டி. குணவர்த்தன (04.01.2012 வரை)
பேராசிரியர் ஆர்.ஏ. ஆட்டிகல (05.01.2012 லிருந்து)

**பதிவாளர்**
திரு. ஏ.எல். ஜ.ஃபர் சாதிக்

## 2.6 யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் எம். சிவசூரிய

**உப வேந்தர்**
பேராசிரியர் (திருமதி) வசந்தி அரசரட்ணம்

**பதிவாளர்**
திரு. வி. காண்டீபன்

## 2.7 றுகுணு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதி. வண. ராஜகீய பன்டித பல்லத்தார சுமணஜோதி நாயக்க தேரோ (04.01.2012 லிருந்து)

**உப வேந்தர்**
பேராசிரியர் ஏ.எல்.எஸ். மென்டிஸ்

**பிரதி துணை வேந்தர்**
பேராசிரியர் எஸ்.ஜி.என். சேனநாயக்க

**பதிவாளர்**
திருமதி. பி.எஸ். கழுகம

## 2.8 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**வேந்தர்**
திரு. சாம் எஸ் விஜேயசிங்க

**உப வேந்தர்**
பேராசிரியர் உபாலி விதானபத்திரான (16.06.2012 வரை)
கலாநிதி விஜித நானயக்கார (17.06.2012 லிருந்து)

**பிரதி துணை வேந்தர்**
கலாநிதி ஜே. லியனகம

**பதிவாளர்**
திருமதி. டவ்ளியூ. எல். விந்தியா ஜயசே

## 2.9 இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் யோகா ராசநாயகம்

**உப வேந்தர்**
கலாநிதி கே. பிரேம்குமார் (பதில்) (12.02.2012 வரை)
கலாநிதி கே. கோபிந்தராஜா (13.02.2012 லிருந்து)

**பதிவாளர்**
திரு. கே. மகேசன்

## 2.10 இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் அச்சி எம் இசாக்

**உப வேந்தர்**
கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில்

**பதிவாளர்**
திரு. எச்.ஏ. சத்தார்

## 2.11 இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் ஏ.வி. சுரவீர

**உப வேந்தர்**
பேராசிரியர் கே.ஏ. நந்தசேன (12.10.2012 வரை)
பேராசிரியர் கே.ஏ. நந்தசேன (பதில்) (12.10.2012லிருந்து 14.12.2012 வரை)
பேராசிரியர் கே. எச். ரன்ஜித் விஜேவர்த்தன (15.12.2012 லிருந்து)

**பதிவாளர்**
திரு. ஏ.ஜி. கருணாரத்ன

## 2.12 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வண. பேராசிரியர் கம்பருகமுவ வஜிர தேரா

**உப வேந்தர்**
பேராசிரியர் எம்.எஸ். ரூபசிங்க

**பதிவாளர்**
திரு. கே.எம். நவரத்ன பண்டா (பதில்) (29.02.2012 வரை)
திரு. எம்.எம். விமலசிறி (01.03.2012 லிருந்து)

## 2.13 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக

**உப வேந்தர்**
பேராசிரியர் ஏ.என்.எப். பெரேரா

**பதிவாளர்**
திரு. இ.ஏம். ஜி. எக்கநாயக்க

### 2.14 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வண. கலாநிதி. அத்துவேவ சோரத தேரா

**உப வேந்தர்**
பேராசிரியர் டவ்ளியூ.பி.ஆர்.பி. டி சில்வா

**பதிவாளர்**
திரு. ஆர்.வி.எஸ்.பி. ராஜபக்ஸ (பதில்) (14.02.2012 வரை)
திருமதி. நில்மினி டியாபேடன்கே (15.02.2012 லிருந்து)

### 2.15 கட்புல, அரங்கேற்க்கலை பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பண்டிதர் கலாநிதி டவ்ளியூ.டி. அமரதேவ

**உப வேந்தர்**
பேராசிரியர் ஜயசேன கொட்டேகொட

**பதிவாளர்**
திரு. சேடாரி ஹெட்டிகே (பதில்)

## 3. நிறுவகங்கள்

### 3.1 விவசாயப் பட்டப்பின்படிப்பு நிலையம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் கொலின் என் பீரிஸ்

### 3.2 பாளி பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் சுமனபால கல்மன்கொட

### 3.3 சுதேச மருத்துவ நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி ஆர்.ஏ. ஜயசிங்க (பதில்) 15.04.2012 வரை)
திரு. சனிமல் சேனரத்ன (16.04.2012 லிருந்து)

### 3.4 மனிதவள மேம்பாட்டு நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி டவ்ளியூ.கே. ஹிரிபுரேகம (13.05.2012 வரை)
கலாநிதி ரொஹான் பி பெரேரா (14.05.2012 லிருந்து)

### 3.5 மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி ஜயந்த ஜயவர்த்தன

### 3.6 தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி ஜகத் வீரசிங்க

**3.7 முகாமை பட்டப்பின்படிப்பு நிறுவகம்**

**பணிப்பாளர்**
கலாநிதி உடித பி லியனகே

**3.8 கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர் ஜி.என. விக்ரமநாயக்க

**3.9 கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர் (திருமதி) ஜே.ஏ. லியனகே

**3.10 விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர் பி.எஸ்.பி. கருணாரட்ன

**3.11 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் தேசிய நிறுவகம்**

**பணிப்பாளர்**
திரு. எம்.எஸ்.யு. அமரசிறி

**3.12 மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம்**

**பணிப்பாளர்**
கலாநிதி ரி.ஏ.ஜி. குணசேகர

**3.13 உயிர் இரசாயன, மூலைக்கூற்று உயிரியலும், உயிர் தொழில்நுட்பமும் நிறுவகம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர் கே.எச். தென்னக்கோன்

**3.14 சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்**

**பணிப்பாளர்**
திருமதி பி. ராஜேஸ்வரன் (பதில்) (16.04.2012 வரை)
கலாநிதி கே. பெரேம்குமார் (17.04.2012 லிருந்து)

**3.15 ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம்**

**பணிப்பாளர்**
கலாநிதி (திருமதி) எச்.வி.எம். ரத்வத்த (பதில்) ( 29.02.2012 வரை)
கலாநிதி (திருமதி) எச்.வி.எம். ரத்வத்த (01.03.2012 லிருந்து)

**3.16 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்**

**பணிப்பாளர்**
கலாநிதி ஆர்.எம்.கே. ரத்நாயக்க (பதில்)

### 3.17 கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில் நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி நிசாந்த பெரேரா (டிசெம்பர் 2011 வரை)

## 4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2011ம் ஆண்டில் நடத்தப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சைக்கு பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் என இரு குழுக்களையுடைய பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தார்கள். ஆகவே ப.மா.ஆணைக்குழு பரீட்சைகள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் இப் பரீட்சை பெறுபேறுகளை எவ்வாறு வெளியிடுவது - அதாவது பல்கலைக்கழுகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்ய, பழைய பாடத்திட்டத்தினையும், புதிய பாடத்திட்டத்தினையும் ஒன்றினைப்பதனையிட்டு ப.மா.ஆ. குழுவிற்கு ஆலோசனை கூற நிபுணர்கள் குழுவொன்றினை நியமிப்பதற்குத் தீர்மானித்தது.

குறிப்பிட்ட நிபுணர் குழுவின் சிபாரிசை அடிப்படையாகக் கொண்டு, இவ்விரு குழு மாணவர்களையும் ஒன்றினைத்து இஸட் புள்ளிகளைக் கணிக்கவும், சிறப்பு ஒழுங்கின் படி சிறப்பு ஒழுங்கு நிரையினைத் தயாரிக்கவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பெறுபேறுகள் வெளியிடப்பட்டதும், ப.மா. ஆணைக்குழுவின் தீர்மானத்தை எதிர்த்து இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தினாலும், க.பொ.த. உயர் தர பரீட்சைக்கு 2011ல் தோற்றிய 16 பரீட்சார்த்திகளாலும் உயர் நீதி மன்றத்தில் SC(FR) 29/2012 இல. விண்ணப்ப மனு தாக்கல் செய்யப்பட்டது. 25.06.2012ல் வழங்கப்பட்ட இவ் வழக்கின் தீர்ப்பில், 2011ம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் இஸட் புள்ளிகளைத் தயாரிப்பதற்காக திருத்தப்பட்ட 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 15 (vii) பிரிவின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிவிபரவியல் தரங்கள், கோட்பாடுகளின் படி பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் ஆகியவற்றை இரு தனித் தொகுதிகளாக்கும் அடிப்படையில் அவசியமான தொடர்புள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு ப.மா. ஆணைக்குழு பணிக்கப்பட்டது. அத்துடன் மேலே குறிப்பிட்ட பிழைகளையும், குறைபாடுகளையும் சீர்செய்து 2011ம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளின் இஸட் புள்ளிகளை அனாவசிய தாமதமில்லாது சட்டத்திற்கேற்ப மீண்டும் வெளியிட தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ப.மா. ஆணைக்குழு பணிக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கு 2011/2012 வருடத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு சிறப்பு ஒழுங்கின்படி அட்டவணையைத் தயாரிப்பதற்கான முறை, இத் தீர்ப்பில் விசேடமாக குறிப்பிடப்படாததால், அதிமேன்மைதகு ஜனாதிபதி அவர்கள் பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களைக் கொண்ட இரு குழுக்களின் மாணவர்களை நிரைப்படுத்துவதற்கான முறையொன்றினை முன்மொழிவதற்காக நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றினை நியமிக்கத் தீர்மானித்தார்.

குறிப்பிட்ட இக் குழு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் நோக்குக்காக, உயர் நீதி மன்றத்தினால் பணிக்கப்பட்டவாறு பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டம் ஆகியவற்றை இரு தனி குடிகளாகக் கருத்திலெடுத்து கணிக்கப்பட்ட இரு கூறுகளின் இஸட் புள்ளிகளை ஒன்றினைத்து 2011 ஆண்டின் க.பொ.த. (உ/த) பரீட்சைக்காக ஒரு தொகுதி இஸட் புள்ளிகளை இறங்கு ஒழுங்கின்படி நிரைப்படுத்தி ஒரு கூறதக இஸட் புள்ளிகளை வகுக்க சிபாரிசி செய்தது. அதன்படி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு இஸட் புள்ளிகளையும், மாவட்டம், தீவு ஆகியவற்றிக்கான நிரைகளையும் தயாரிக்கும்படி ஆலோசனை வழங்கப்பட்டது.

2வது சிறப்பு அட்டவணை தயாரிக்கப்பட்ட முறைமைக்கு எதிராகவும் எட்டு (8) வழக்குகள் - முறையே 560/2012, 459/2012, 462/2012, 445/2012, 441/2012, 418/2012, 466/2012, 480/2012 இல. விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவ் வழக்குகளின் விண்ணப்பதாரிகளுக்காத் தோன்றிய வழக்கறிஞர்கள், இவ்விரு பரீட்சைகளின் கடின மட்டங்கள் வெவ்வேறாகவிருப்பதால், பரீட்சார்த்திகளின் தகுதியைத் நிர்ணயிக்க பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கு அமைவாக நடந்த

பரீட்சைகளின் பெறுபேறுகளை தனியானதொரு மதிப்பிடலாக கருத முடியாது என்னும் கருத்தினைக் கொண்டிருந்தார்கள்.

உயர் நீதிமன்றமும், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான சிறப்பு அட்டவணை தயாரிப்பதற்கு பரீட்சார்த்திகளான இரு குழுக்களையும், இரு தனிப்பட்ட தொகுதியாக எடுக்கவேண்டுமென்னும் கருத்தினைக் கொண்டிருந்ததால், உயர் நீதிமன்றம் இவ் வழக்குகளின் இரு பகுதியார்களையும் கௌரவ சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்து தகுந்த முடிவினை எடுக்க அனுமதி வழங்கியது.

இவ் விடயத்தினைத் தீர்க்கும் பொருட்டு, ப.மா. ஆணைக்குழு நான்கு மாற்றுத் தீர்மானங்களைத் தயாரித்தது. ப.மா. ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட் நான்கு முறைகளில், மூன்றாது முறையினை உயர் நீதிமன்றமும், சகல பகுதியார்களும் ஏற்றுக் கொண்டார்கள். இம் முறையின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் வீதம் முதல் முறை பரீட்சார்த்திகளின் உயர்மட்ட வீதத்தையும், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து சென்ற ஐந்து வருடங்களின் போது பல்கலைக்கழகங்களுக்கு ஒவ்வொரு பாடநெறிக்கும் அனுமதிக்ப்பட்ட மீள்பரீட்சார்த்திகளையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும். இம் முறையினை மேற்கொள்ளும் போது, இவ் வருடத்திற்கு உள்வாங்க முன்மொழியப்பட்ட 21,500 மாணவர்களுடன் மேலதிகமாக 5,609 மாணவர்களைத் தெரிவு செய்யவும் பமா ஆணைக்கு எதிர்பார்க்கின்றது.

அத்துடன் 22.07.2012ல் வெளியிடப்பட்ட முந்திய நிரைப்படுத்தல்களை வெற்றாக்கி, மாணவர்களைத் தெரிவு செய்தல் தொடர்பாக புதிய, பழைய பாடத்திட்டங்களின் கீழ் ஒவ்வொரு பாடநெறிக்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய வெட்டுப் புள்ளிகளையும் வெளியிட வேண்டுமெனவும் அதியுயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

மேலும் 2011/2012ம் வருட கல்வியாண்டிற்குச் செல்லுபடியாகும் மாணவர்களைச் சேர்க்கும் கைநூலின் 11ம் பிரிவின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை 10% சிறப்பின் கீழ் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்குவதற்கும், மீதியாகவுள்ள 30% சிறப்பு அனுமதி கோட்டா பங்குகளை மேற்குறிப்பிட்ட III ம் சூத்திரத்தின் (3வது முறையின்) கீழ், முதல் முறை தோற்றுவோருக்கும், இரண்டாம் முறை தோற்றுவோருக்கும் இடையேயுள்ள மீதியான எண்ணிக்கைகளின் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு ஓதுக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், சிறப்பு பங்குகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 40% (10% + 30%) மாணவர்களை ஒதுக்கியதன் பின்னர், மாவட்ட பங்கீட்டுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இடங்களின் 60% னை முதலாம் முறை தோற்றுவோருக்கும், இரண்டாம் முறை தோற்றுவோருக்கும் இடையேயுள்ள மீத எண்ணிக்கை வீதத்தை அடிப்படையாகக் கொண்டு நிரப்பபடல் வேண்டும்.

மேலும் உயர் நீதி மன்றம், முன்னர் கற்கை பாட நெறிகளுக்கு நடை முறைப் பரீட்சைகள் / விவேகப் பரீட்சைகள் ஆகியவற்றில் சித்தியடைவது ஒரு தேவைப்பாடாகவிருந்ததை போன்று தொடர்ந்தும் அப் பாடநெறிகளுக்கு நடைமுறைப் பரீட்சைகள் / விவேகப் பரீட்சைகளை நடத்துமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிக்கு உத்தரவிட்டது.

அதன்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சகல பல்கலைக்கழகங்களையும் அவ்வாறான கற்கை நெறிகளுக்கான செயல்முறை/விவேகப்பரீட்சைகளை தேவையானவிடத்து நடத்துவதற்கு பணித்தது. எவ்வாறாயினும் அப் பரீட்சை பெறுபேறுகள் 31.12.2012 திகதிவரை ப.மா. ஆணைக்குழிவிற்கு கிடைக்காததால், 2011/2012 கல்வி ஆண்டிற்குரிய மாணவர்கள் அனுமதியை வருட இறுதிவரை பூர்த்தி செய்யவில்லை.

2011ம் வருட க.பொ.த. (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு 2011/2012 கல்வியாண்டிற்கான பல்கலைகழக அனுமதிக்கு மொத்தமாக 141,411பரீட்சார்த்திகள் தகுதி அடைந்தார்கள்.

## 5. கல்விசார் அபிவிருத்தியும், கல்விசார் தராதரங்களைப் பேணுதலும்

### 5.1 நிலையில் குழுக்கள்

1978ம் ஆண்டின் 16ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டம் 4(2) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி, ப.மா. ஆணைக்குழு நிலையியல் குழுக்களை நிறுவியுள்ளது. ப.மா. ஆணைக்குழுவிற்கு உயர் கல்வியின் குறிப்பிட்ட பகுதிகள் தொடர்பான விடயங்களையிட்டு அறிக்கைகளையும், சிபாரிசிகளைச் செய்வது ஒவ்வொரு நிலையியல் குழுக்களினதும் பொறுப்பாகும். இதற்கமைய, 2012ம் வருடத்தில், ப.மா. ஆணைக்குழுவில் பல்வேறு ஒழுங்குமுறைகளுக்காக பதினைந்து (15) நிலையியல் குழுக்களும், ஏனைய ஒரு (01) குழவும் செயற்பட்டன. ஒவ்வொரு நிலையியல் குழுக்களின் கீழ் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கைகள் பின்வருமாறு:

| **நிலையியல் குழுவின் பெயர்** | **2012ல் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கைகள்** |
|---|---|
| 1. விவசாயம், விலங்கு வைத்தியம் மற்றும் விலங்கு விஞ்ஞானங்கள் | 05 |
| 2. நூலகமும், தகவல் விஞ்ஞானங்களும் | 04 |
| 3. ஆங்கிலம் கற்பித்தல் | 06 |
| 4. பல்கலைக்கழகங்களில் தொழில் வழிகாட்டலும், மாணவர் நலனோம்பலும் | 06 |
| 5. விஞ்ஞானங்கள் | 06 |
| 6. பட்டப்பின்படிப்பும், ஆய்வும் | 04 |
| 7. மானிடவியல், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் கலவி | 02 |
| 8. முகாமைத்துவக் கற்கைகள் | 06 |
| 9. பொறியியலும், கட்டடக்கலையும் | 06 |
| 10. மருத்துவமும், பல் விஞ்ஞானங்களும் | 05 |
| 11. தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி | 06 |
| 12. நியம உறுதிப்படுத்தலும், அங்கீகரித்தலும் | 05 |
| 13. சுதேச மருத்துவம் | 06 |
| 14. வெளிவாரி பட்டங்கள் | 02 |
| 15. பல்கலைக்கழகங்களின் ஆளணியினர் அபிவிருத்தி | 03 |
| **ஏனைய குழுக்கள்** | |
| தராதரங்கள் பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்களை ஆராயும் குழு | 04 |

### 5.2 இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தலும்/ மீள்கட்டமைத்தலும்

பல்வேறு பீடங்கள் /பல்கலைக்கழகங்களினால் வைக்கப்பட்ட முன்மொழிவுகளைக் கருத்திலெடுத்து, ஆய்விலுள்ள வருடத்தில் பின்வரும் இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியது.

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விசேட தேவைகள் கல்வி பட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்

### 5.3 பட்டப்பின்படிப்பு பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்கள்

2012ம் வருடத்தில் ப.மா. ஆணைக்குழு பட்ப்பின்படிப்பு பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்களை அனுமதிக்க தகுந்த ஆய்வு மற்றும் மீள்பார்வை பொறிமுறையைக் கொண்டு, பின்வரும் 06 பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுமதியளித்தது.

1. றுகுணு பல்கலைக்கழத்தின் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப விஞ்ஞான முதுமாணி பட்டப்பின்படிப்பு/டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம்
2. மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொலிமர் தொழில் நுட்ப விஞ்ஞான முதுமாணி பட்டப்பின்படிப்பு/டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம்
3. மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உள்ளக வடிவமைப்பு விஞ்ஞான முதுமாணி பட்டப்பின்படிப்பு/டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம்
4. கொழும்பு பல்கலைக்கழகத்தின் மீள்விருத்தி மருத்துவ பட்டப்பின்படிப்பு விஞ்ஞான முதுமாணி
5. கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கலை முதுமாணி
6. களனிய பல்கலைக்கழகத்தின் வணிக கணக்கிடல் முதுமாணி, வணிக நிதி முதுமாணி

மேற்குறிப்பிட்டவற்றுடன், ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்ப்பின்படிப்பு (MBA/MPM/M.Sc.) நிகழ்ச்சித் திட்டங்களில் மாற்றங்களைச் செய்வதற்கும் அனுமதியினை ப.மா. ஆணைக்குழு வழங்கியது.

## 5.4 புதிதாக நிறுவப்பட்ட பீடங்கள்

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொறியியல் பீடங்களை நிறுவுவதின் முக்கிய தேவையினை இனம் கண்டதுடன், தேசிய விருப்புக்களை நிறைவு செய்யும் பொருட்டும், பின்வரும் கற்கைப் பகுதிகள் தொடர்பான கல்விசார் நடவடிக்கைகளை விரிபுபடுத்தும் நோக்கிலும், பின்வரும் புதிய பீடங்களை நிறுவ ப.மா. ஆணைக்குழு அனுமதியை வழங்கியது.

- யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

  பின்வரும் நான்கு பகுதிகளைக் கொண்ட பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் நிறுவுதல்

  1. குடியியல் பொறியியற் பகுதி
  2. மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியற் பகுதி
  3. கணினிப் பொறியியற் பகுதி
  4. துறைசார் கற்கைகளுக்கிடையிலான பகுதி

- இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

  பின்வரும் ஐந்து பகுதிகளுடன் பொறியியல் பீடத்தை நிறுவுதல்

  1. குடியியல் பொறியியற் பகுதி
  2. கணினி விஞ்ஞான மற்றும் பொறியியற் பகுதி
  3. பொறிமுறை எந்திரவியற் பகுதி
  4. மின்சார மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியற் பகுதி
  5. துறைசார் கற்கைகளுக்கிடையிலான பகுதி

## 5.5 புதிதாக நிறுவப்பட்ட துறைகள்

குறிப்பிட்ட நிலையியல் குழுவின் சிபாரிசிகளையும், குறிப்பிட்ட பாட நெறிப் பகுதியின் கல்விசார் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கத்திற்காகவும், புதிய துறைகளை நிறுவுவதன் முன் தேவைகளையும் கருத்திலெடுத்து, பின்வரும் புதிய துறைகளை நிறுவ ப.மா. ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

- யாழ்ப்பாண பல்கலைக்கழகம

  முகாமைத்துவக் கற்கைகள், வணிக பீடத்தின் வணிகத் துறை

**5.6 (1) வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை அங்கீகரித்தல்**

ஆய்விலுள்ள வருடத்தில், வெளிநாட்டு பல்கலைக்கழங்களிலிருந்து கல்விசார் பட்டங்களைப் பெற்ற இலங்கை மாணவர்களிடமிருந்து, அப் பல்கலைக்கழங்களை அங்கிகரிக்குமாறு விடுக்கப்பட்ட 150க்கும் மேலான வேண்டுகோள்களை ப.மா. ஆணைக்குழுவின் கல்விசார் விவகாரத் துறை கையாண்டுள்ளது.

**(2) அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவகங்களின் மீளாய்வு**

1978ன் பல்கலைக்கழகச் சட்டம் இல. 16ன் 25 A பிரிவு உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக ஏதேனும் நிறுவனத்தை பட்டம் வழங்கும் நிறுவகமாக அங்கீகரிக்க அமைச்சருக்கு ஏற்பாட்டினை வழங்குகின்றது.

2012ம் வருடத்தில் ப.மா. ஆணைக்குழு ஒவ்வொரு பட்டமாணி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக நிறுவன மீளாய்வுகள், நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் ஆகியவற்றை நடத்தியதன் பின்னர், பின்வரும் பட்டமாணிகளை கௌரவ கல்வி அமைச்சருக்கு சிபாரிசி செய்தது.

| **நிறுவனத்தின் பெயர்** | **பட்டமாணியின் பெயர்** |
|---|---|
| **இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவகம்** | மின்சார, இலத்திரனியல் பொறியியலில் விஞ்ஞான பொறியியல் இளமாணி பட்டம்<br>இயந்திரவியல் பொறியியலில் விஞ்ஞான பொறியியல் இளமாணி பட்டம்<br>குடிசார் பொறியியலில் விஞ்ஞான பொறியியல் இளமாணி பட்டம்<br>பொருட்கள் பொறியியலில் பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டம் |
| **இலங்கை பட்டயக கணக்காளர்கள் நிறுவகம்** | விஞ்ஞான இளமாணி பட்டம் (பிரயோக கணக்கிடல்) |
| **தேசிய வணிக முகாமைத்துவ நிறுவகம் (NIBM)** | வணிக முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா<br>கணனி வலைப்பின்னல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா<br>மனித வள முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா<br>கைத்தொழில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா<br>கருத்திட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா<br>மென்பொருள் பொறியியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா |
| **இலங்கை சர்வதேச பௌத்த அகடமி** | பௌத்த தலமைத்துவ விசேட கலை பட்டமாணி |

மேலும் ப.மா. ஆணைக்குழு 2012 யூலை 26ல் நடந்த அதன் 854வது கூட்டத்தில் தேசிய வணிக முகாமைத்துவ நிறுவகத்திற்குரிய (NIBM) பட்டம் வழங்கும் அந்தஸ்த்தை நீக்கி, அதன் பட்டம் வழங்கும் பாடசாலையாகிய வணிக முகாமைத்துவ தேசிய பாடசாலைக்கு (NSBM)

பட்டம் வழங்கும் அந்தஸ்த்தை வழங்குவதற்கு கௌரவ உயர் கல்வி அமைச்சருக்கு சிபாரிசி செய்யத் தீர்மானித்தது.

## 5.7 மொழி தேர்ச்சிகள், தகவல் தொழில் நுட்பத்தினையும், மென் தேர்ச்சிகளையும் அபிவிருத்தி செய்தல்

மொழி தேர்ச்சிகள், தகவல் தொழில் நுட்பம், மென் தேர்ச்சிகள் போன்றவற்றில் உயர் தகுதிகளைக் கொண்ட பட்டதாரிகளுக்கு அதிக சந்தைக் கேள்வியுள்ளதால், அத் தேர்ச்சிகளை அவர்களின் பட்டம் பயிலும் காலத்தில் அபிவிருத்தி செய்தல் அவசியமாகும்.

ஆகவே 2011ம் வருடத்திலிருந்து, பல்கலைக்கழகங்களின் புதிய மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் முன் பரீட்சயமாக்குதல் நிகழ்ச்சித் திட்டமும் உயர் கல்வி அமைச்சினால் நடாத்தப்படுகின்றது. அத்துடன் மாணவர்களின் ஆற்றல் தகுதிகளையும், விளையாட்டுத் தேர்ச்சிகளையும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன், மாணவர்களின் ஆற்றல் அபிவிருத்தி (கவிதா நிகழ்ச்சித் திட்டம்) மற்றும் விளையாட்டுகள் தேர்ச்சிகளுக்கான அபிவிருத்தி ஆகிய மற்றும் இரு நிகழ்ச்சித் திட்டங்களும் பட்டதாரி மாணவர்களுக்காக உயர் கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்றன.

### a) மொழி தேர்ச்சிகள்

ஆய்வு வருடத்தில், ஆங்கிலம் கற்பித்தல் நிலையியல் குழுவினால், பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில மொழி தேர்ச்சிகளை வலுப்படுத்துவதற்காக பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இதன் தொடர்பாக பல்கலைகழக முறைமையின் சகல ஆங்கில மொழி கற்பித்தல் அலகுகளையும் வலுப்படுத்தல் பாரிய நடவடிக்கையாக இடம் பெற்றது.

மாணவர்களின் மொழி தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்காக, சாத்தியமானவிடத்து, பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்களில் ஆங்கில மொழியையும் ஒரு பாடமாக அறிமுகம் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இரு மொழிகளைக் கற்பித்தல் மற்றும் சிங்கள/தமிழ் மொழி கற்கை நெறிகளில், ஆகக் குறைந்தது, ஒரு சில பாட நெறிக் கூறுகளையும் ஆங்கிலத்தில் கற்பிப்பதற்கும் அறிமுகம் செய்யப்பட்டது.

அத்துடன், ப.மா. ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு, அரச மொழிகள் திணைக்களம் ஆகியன, மொழிபெயர்ப்பு கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் இணைப்பாளர்களுடன் பல கலந்துரையாடல்களை நடாத்தி, மொழிபெயர்ப்பு இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய தொழில் சார் பயிற்சிக்கான மாதிரி பாடவிதானத்திற்கான வழிகாட்டிகளை வடிவமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

### b) தகவல் தொழில் நுட்ப தேர்ச்சிகள்

சகல பாடநெறிகளிலும், தகவல் தொழில் நுட்பத்தினை மூலாதார பாடமாக கற்பிப்பதற்கான பொது பாடவிதானமொன்றினை அபிவிருத்தி செய்வதறகுரிய வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்கு, இவ்விடயம் தொடர்பான நிலையில் குழுக்களினால் முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கலைப் பீடங்களின் சகல பீடாதிபதிகளுக்கும், கல்விசார் சமூகத்திற்கும் இது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்ட வேளை, கலைப் பட்டதாரிகளுக்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சிறப்படைவதற்கான மாதிரி பாடவிதானமொன்று விருத்தி செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் இப் பாட நிகழ்ச்சித் திட்டத்தினை 2014ல் அறிமுகம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**c) மென் தேர்ச்சிகளும், செயல்முறை பயிற்சிகளும்**

தொழில் வழிகாட்டி நிலையியல் குழு, ஜோன் கீல்ஸ் சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றினைந்து, மாணவர்களிடையே மென் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கான செயலமர்வொன்றினை பேராதனை பல்கைலக்கழகத்தில் நடாத்தியது. மேலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தினை ஏனைய பல்கலைக்கழகங்களிலும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு பொது/தனியார் துறைகளில் பயிற்சியளிக்கும் வாய்ப்புக்களை வழங்குவதன் முக்கியத்துவத்திற்கு முன்னுரிமையளிப்பதற்கு இனம் காணப்பட்டுள்ளது. இதற்கமைய அனேகமான பல்கலைக்கழகங்கள், வைத்தியம், பொறியியல் ஆகிய பாட நெறிகளுடன் முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்பம் போன்ற பாடநெறிகளிலும் செயல்முறை பயிற்சி கூறுகளை உள்வாங்கியுள்ளன. மானிடவியல், சமூக விஞ்ஞானங்கள், விஞ்ஞானங்கள் ஆகிய பாடத்துறைகளில் செயல்முறைப் பயிற்சிகளை அறிமுகம் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆணைக்குழுவினால் நிறுவப்பட்ட இது தொடர்பான நிலையில் குழுக்களினால் ஆய்வு செய்யப்படடன.

## 5.8 நடத்தப்பட்ட செயலமர்வுகள்

- **தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள்/தொழில் வழிகாட்டி ஆலோசகர்களுக்கான கல்விசார் தொழில் வழிகாட்டி/ கல்விசார் தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள் ஆகிய பயிற்சிக்கான இரு நாள் செயலமர்வுகள்**

  ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 934 னால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் வழிகாட்டி பயிற்சி கூற்றினை வலுப்படுத்தி, இலகுபடுத்தும் பொருட்டு, தொழில் வழிகாட்டி நிலையியல் குழு, 21வது நூற்றாண்டிற்கான உயர் கல்வி நிகழ்ச்சித் திட்டம் (HETC) தொழில் வழிகாட்டி ஆலோசகர்களை பயிற்றுவிப்பதற்கான EDEX தொழில் சேவைகள்/கல்விசார் தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள் ஆகியோருடன் ஒன்றினைந்து 2012 டிசெம்பர் 4, 5ம் திகதிகளில் கொழும்பு ஹொட்டல் ஜானகியில் நடத்தப்பட்ட இரு நாள் செயலமர்வு சகலரினதும் பங்குபற்றலுடன் வெற்றிகரமாக முடிவடைந்தது.

- **ஜோன்கீல்ஸ் சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றினைந்து தொழில் வழிகாட்டி நிலையியல் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மென் தேர்ச்சிகள் அபிவிருத்திற்கான மூன்று நாள் செயலமர்வு**

  தொழில் வழிகாட்டி நிலையியல் குழு, மாணவர்களிடையே மென் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்குரிய தேவையினை இனம் கண்டதுடன், ஜோன்கீல்ஸ் சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றினைந்து மென் தேர்ச்சி அபிவிருத்தி செய்வதற்கான மூன்று நாள் செயலமர்வினை பேராதனை பல்கலைக்கழகத்தில் நடாத்தியது. இச் செயலமர்வில் சிறந்த மூலவலவாளர்களுடன், சகல பீடங்களிலிருந்தும் ஐநூறு மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

- **21ம் நூற்றாண்டிற்கான சுகாதார தொழில்சார் நிபுணர்களின் கல்விற்கான உலக ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடல்**

  மருத்துவ, பல் விஞ்ஞானங்கள் நிலையியல் குழு 21ம் நூற்றாண்டிற்கான சுகாதார தொழில்சார் நிபுணர்களின் கல்விற்கான உலக ஆணைக்குழுவின் அறிக்கையை, 2012 யூன் 8ம் திகதி ஹெக்டர் கொபேகடுவ விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தில் வெளியிடுவதை ஆரம்பித்து வைத்தது. உலகளாவிய ரீதியில் சுகாதார தொழில்சார் கல்வியினை 2ம் நூற்றாண்டிற்கு மீளமைப்பது தொடர்பாக, இவ் அறிக்கையிலுள்ள கண்டுபிடிப்புகளையும், சிபாரிசிகளையும் பற்றி சுகாதார தொழில்சார் நிபுணர்கள் அறிந்து கொளளச் செய்வதே இவ் வெளியீட்டின் நோக்கமாகும்.

இந் நிகழ்வு உள்வாரி மருத்துவ கல்விசார் குழுவினாலும், இலங்கை தேசிய விஞ்ஞானங்கள் அகடமியினாலும் ஒன்றினைந்து ஒழுங்கு செய்யப்பட்டது.

- **MBBS பரீட்சைகளின் மனே வியாதிவியலுக்கான பொது பரீட்சை மாதிரியினைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் - மனே வியாதி குழு**

  மருத்துவ, பல் விஞ்ஞானங்கள் நிலையியல் குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட MBBS இறுதியாண்டிற்கான பொது பல்தேர்வு வினாவிற்கான மாதிரிகளுக்கு தனியான சிறந்த விடையினைத் (SBA) தயாரிக்கும் பொருட்டு கலந்துரையாடல் 2012 செப்டம்பர் 13ம் திகதி ப.மா. ஆணைக்குழுவில் இடம் பெற்றது.

- **சுதேச மருத்துவ பாடவிதானத்தை மீளாய்வு செய்வதற்கான செயலமர்வு**

  தற்போதுள்ள சுதேச மருத்துவ பாடவிதானத்தை மீளாய்வு செய்து, ஆயுர்வேத/சித்த/யூனானி மருத்துவப் பகுதிகளில் பொது பல்தேர்வு வினாப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கான மையமான பாடவிதானத்தைத் தயாரிப்பதற்கான செயலமர்வு 2012 ஆகஸ்ட 28ல் கொழும்பு ஹொட்டல் ஜானகியில் நடாத்தப்பட்டது.

- **பல்கலைக்கழகங்களில் ஆயூர்வேத/யூனானி/சித்த மருத்துவ நிகழ்ச்சித் திட்டங்களில் நியமத்தை மேம்படுத்துவதற்கான வதிவிட செயலமர்வு**

  HETC நிகழ்ச்சித் திட்டம், சுதேச மருத்துவ நிலையியல் குழு. ப.மா. ஆணைக்குழுவின் QAA சபை ஆகியன ஒன்றினைந்து 2012 ஒக்டோபா 15 – 16 ல் உஸ்வதகியாவ ஹொட்டல் பாம் விலேஜில் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

- **உலக சுற்றாடலில் தோன்றும் தேவைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள இலங்கை பல்கலைக்கழகங்களை மீள் உருவாக்குதலும், மீள் நிலைப்படுத்தலும்**

  உலக சுற்றாடலில் தோன்றும் தேவைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள இலங்கை பல்கலைக்கழகங்களை மீள் உருவாக்குதலும், மீள் நிலைப்படுத்தலும் தொடர்பான செயலமர்வு HETC நிதியளிப்புடன் ப.மா. ஆணைக்குழுவினால் 2012 யூன் 18 – 19 களில் வாதுவை சான்டஸ் பீச் ஹொட்டலில் நடாத்தப்பட்டது. கல்விசார் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், தனியார் துறை மற்றும் வெளிநாட்டு மூலவலவாளர்கள் ஆகியோரைப் பிரதிநிதிப்படுத்தும் 80 உறுப்பினர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினார்கள். உயர் கல்வியில் தோன்றும் வாயப்புக்களை பற்றிக் கொள்ளலும், உலக சுற்றாடலின் கடும் போட்டிமிக்க சவால்களைக் கையாளுவதுமே இச் செயலமர்வின் நோக்கமாகும்.

  இச் செயலமர்வின் செயற்பாடுகளை பிரசுரிக்கப்படுவதுடன், அதி உத்தம ஜனாதிபதி அவர்களுக்கும், கௌரவ உயர் கல்வி அமைச்சருக்கும் அவைகளை அமுல்படுத்த சிபாரிசிகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

## 5.9 இலங்கை பல்கலைக்கழகங்களின் நூலகங்களை பேணுவதற்கும், பத்திரப்படுத்துவதற்குமான அலகுகளை நிறுவுதல்

பல்கலைக்கழக நூலகங்களைப் பேணுதலுக்கும், பத்திரப்படுத்துவதற்குமான அலகுகளை நிறுவுவதற்கான முன்மொழிவினை ஆணைக்குழு அங்கீகரித்தது. இதற்காக கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் 4 நூலகங்ள் ஒவ்வொன்றிக்கும் ஆரம்ப தொகையாக ருபா ஒரு மில்லியன் 2012ல் ஒதுக்கப்பட்டது.

### 5.10 கனிஷ்ட கல்விசார் நிபுணர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய தகவல் நூல் அறிமுகம்

பல்கலைக்கழக கல்விசார் நிபுணர்களுக்கு தற்பொழுது நடைபெறும் ஆளணியினர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான தகவல் நூலொன்றினை கட்டிணைப்பதற்கும், அதனை ஆளணியினர் அபிவிருத்தி நிலையங்களுடனும், நூலகங்களின் சிரேஷ்ட ஆளணியினர் உறுப்பினர்களுடனும். ஒன்றினைந்து வழங்குவதற்குமான முன்மொழிவினை ஆணைக்குழு அங்கீகரித்தது.

### 5.11 பட்டதாரி மாணவர்களின் புள்ளிகளையும், தரங்களையும் மீள் பரிசீலிப்பதற்கான ஏற்பாடுகள்

2011 நவம்பர் 17ம் திகதியன்று நடந்த ப.மா. ஆணைக்குழுவின் 838வது கூட்டத் தீர்மானத்தின் படி, பட்டதாரி மாணவர்கள் விரும்பினால் அவர்களின் பரீட்சைப் புள்ளிகளையும், தரங்களையும் மீள்பரிசீலப்பதற்கான வேண்டுகோள் விடுப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கு தற்போதுள்ள உப-சட்டங்களைத் திருத்த வேண்டி பல்கலைக்கழகங்களும், உயர் கல்வி நிறுவகங்களும் (HEIs) வேணடப்படன.

அதற்கேற்ப, அதில் குறித்துரைக்கப்பட்ட கொள்கை வழிகாட்டிகள், செயல்முறைகளின்படி, சகல பல்கலைக்கழகங்களும் தற்பொழுது நடைமுறையிலுள்ள பரீட்சை உப-சட்டங்கள் / வழிகாட்டிகள் ஆகியவற்றை மீள்திருத்தி முறையான மூதவைகள், சபைகளுக்கு அனுமதிக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

### 5.12 கணனிப் பட்டங்களை சர்வதேச தரங்களுடன் ஒழுங்கு வரிசைப்படுத்த வகைப்படுத்தல்

கணனி பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்களை, ACM/IEEE வழிகாட்டலுடன் சர்வதேச தரங்களுடன் ஒவ்வச் செய்ய ஒருவருடகால்திற்குள் ஒழுங்கமைக்குமாறு, சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், புதிய கணனி பட்டமாணி நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்கும் போது சர்வதேச தரங்களைப் பேணுமாறும் பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

### 5.13 பட்டதாரி/பின்பட்டப்படிப்பு வெளியீடு

**பட்டதாரி வெளியீடு**

2012ம் வருட மொத்த பட்டதாரி வெளியீடு 9352 ஆகும். இம் மொத்த வெளியீட்டில் பெரும்பான்மையாக 37.5% கலைப்பிரிவிலேயே வெளியிடப்பட்டுள்ளது. 2012ம் வருடத்திற்குரிய முழுப் பட்டதாரி வெளியீடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**2010 – 2012ற்கான பட்டதாரி வெளியீடு**

| கல்விசார் பிரிவு | 2010 | 2011 | 2012* |
|---|---|---|---|
| கலைகள் | 4,432 | 6,882 | 3508 |
| முகாமைத்துவமும், வணிகவியலும் | 2,704 | 2,849 | 1725 |
| சட்டம் | 392 | 348 | 429 |
| மருத்துவம் | 797 | 1,061 | 820 |
| பல் விஞ்ஞானம் | 64 | 65 | |
| விலங்கு விஞ்ஞானம் | 60 | 58 | 54 |

| | | | |
|---|---|---|---|
| விவசாயம் | 540 | 595 | 512 |
| பொறியியல | 1,285 | 1,346 | 167 |
| கட்டடக்கலையும் கணிய அளவையியலும | 140 | 211 | 150 |
| விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும் | 2,420 | 2,750 | 1627 |
| இணை மருத்துவம | - | 340 | 183 |
| சுதேசிய மருத்துவம | 208 | 181 | 177 |
| மொத்தம் | **13,042** | **16,686** | **9352** |

**பட்டப்பின்படிப்பு வெளியீடு**

தொழில் சந்தையின் உயர் போட்டிற்கு முகம் கொடுக்கும் பொருட்டு, பட்டப்பின்படிப்பு கற்கைகளில் சேர்வதற்கு மாணவர்களிடையே அதிக ஆர்வமுள்ளது. 2012ம் வருடத்தின் முழு பட்டப்பின்படிப்பு வெளியீடு 7880 ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இது 2,649 ஆக அதிகரிப்பாகும்.

**2012* கான பட்டப்பின்படிப்பு வெளியீடு**

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 50,562,963 ஆல் அல்லது 83 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பிரதான வருமானம் மற்றும் செலவின முரண்கள் பின்வருமாறாகும்.

| | 2012 | 2011 | முரண்கள் | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| முதலீட்டு வருமானம் | 227,837,778 | 224,093,091 | 3,744,687 | 2 |
| அங்கத்துவக் கணக்கிற்கான வட்டி | 189,115,287 | 138,335,257 | 50,780,030 | 37 |
| ஓய்வூதியக் கணக்கிற்கான வட்டி | 6,153,684 | 4,583,812 | 1,569,872 | 34 |
| ஓய்வூதிய நிதியச் சீராக்கம் | 1,755,904 | 1,303,638 | 452,266 | 35 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தின் மீளாய்வாண்டில் இறுதி வரை ஓய்வூதியம் பெறும் ஓய்வு பெற்றோரின் எண்ணிக்கை 121 ஆனதுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ரூபா 17,495,086 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வு பெற்றோரின் நிதியத்தில் செலவில் உள்ள மீதி ரூபா 78,674,647 ஆனதுடன் அம் மீதியிலிருந்து எதிர்காலத்தில் காணப்படக்கூடிய பொறுப்புக்களை கவனத்தில் கொள்ளப்படாது சுமார் 4 1/2 வருட காலத்திற்கு மாத்திரமே ஓய்வூதியம் செலுத்தக் கூடியதாயிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றோரின் தனிப்பட்ட கணக்குகளில் மீதி இல்லாத போதிலும் ரூபா 1,755,904 கூட்டுமொத்த தொகை 15 அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணக்குகளில் தனிப்பட்ட மீதி இல்லாத போதும் ஓய்வூதியம் செலுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 400 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமும் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1,105 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

1999 யூன் 10 ஆம் திதகிய 747 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் மூலம் பல்கலைக்கழகத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஓய்வூதிய நிதியத்திற்கான செலவினங்களான வட்டி, கணக்காய்வுக் கட்டணம் மற்றும் வங்கிக் கட்டணங்கள் மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்ததுடன் ஏனைய நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் ஓய்வூதிய நிதியத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஆ) ஓய்வூதிய முறை மதிப்பீடு

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Ms/v*

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| விடயம் | கணக்காய்வாளர் தலைமைஅதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவிடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் முன்வைக்கப்படும் கருத்துரைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்<br><br>2.2.1 பெற வேண்டிய கணக்குகள் | ஓய்வூதிய நிதியத்திற்கு ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படிக்குரிய ரூபா 32,137,660/= தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2013.03.15 ஆம் திகதியாகும் போது தொகையனைத்தும் அறவிடப்பட்டுள்ளது. | 2013.03.15 ஆம் திகதியாகும்போது தொகையனைத்தும் அறவிடப்பட்டுள்ளது. |
| 2.2.2 சட்டம், விதிகள்,பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமை<br><br>(அ) 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய அப/99/0438/11/033 ஆம் இலக்கஅமைச்சரவைத் தீர்மானம். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்தில் வரவு வைக்கப்படும் 25% தொகையில் 10% இனை ஓய்வூதிய நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும். ஆனாலும் 747 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழச் சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில் வழங்குனரால் சேமலாப நிதியத்தில் வரவு வைக்கப்படும் 15% பங்களிப்புத் தொகையில் 8/15 மான அளவு ஓய்வூதிய நிதியத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக 2013 மார்ச் 07 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்திலும் இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உயர் கல்வி அமைச்சின் செயலாளர், திறைசேறியின் செயலாளருடன் கலந்தாலோசித்ததன் பின்னர் தயாரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபம் 2013.07.03 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை வீதத்தில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பாக அவ்வப்போது உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் திறைசேரிப் பிரதிநிதிகளுடன் பலசுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபம் 2014.05.12 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 97 ஆம் பிரிவு. | 2012 ஆம் ஆண்டில் ஓய்வூதிய நிதியத்தில் முறையே ரூபா 207,724,261 மற்றும் ரூபா 197,135,825 தொகை வருமானம் மற்றும் செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் நிதியத்தை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவம் சம்பந்தமாக ஆணைக் குழுவினால் நடைமுறை விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. | தற்போது நடைமுறை விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) தொழில் ஆணையாளரின் 2005 சனவரி 28 ஆம் திகதிய பா/நிறுவனம்/2004 ஆம் இலக்கக் கடிதம் | 2011.03.23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தில் திருத்தம் மேற்கொள்ளாது திறைசேரி இணக்கப்பாட்டின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2013.01.08 ஆம் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கையை வெளியிட்டமை. இந்த சுற்றறிக்கையை வெளியிடமுன்னர் கல்விசார் படிகள் உள்ளடக்கப்பட்டமையால் ஓய்வூதிய நிதியத்திற்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற 248.57 மில்லியன் ரூபா தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை. | அன்று நிலவிய கல்விசார் ஆளணியின் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிதி அமைச்சின் செயலாளரின் 2012.12.21 ஆம் திகதிய DMS/E1/B4/7/313/2 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கல்விசார் படிகளை மொத்த ஈட்டல் எனும் வரைவிலக்கணத்திற்குள் உட்படுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் 2013.01.08 ஆம் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இது தொடர்பாக விசேட அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டுமா? என திறைசேரியிடம் வினவப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். | 2005.07.01 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கல்விசார் ஆளணி தொடர்பாக பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை கணக்கிடும்போது கல்விசார் படிகளையும் கவனத்திற் கொள்வது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு 2014 மே மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) 1999 யூன் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | ஓய்வூதிய முறைமை ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு புதிய அங்கத்தவர்களின் பங்களிப்பு /பிரதிலாபங்கள் செலுத்துதல்களை அவதானிக்க வேண்டியிருந்தும் அந்த மதிப்பீடுகள் 2008 டிசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2013.01.01 ஆம் திகதி வரைக்கும் உயிர் தரவுகள் கணிப்பீட்டாளரால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | 2013.01.01 ஆம் திகதி வரைக்கும் உயிர் தரவுகள் கணிப்பீட்டாளரால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவரின் சிபாரிசின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| 3. நிதி மீளாய்வு<br><br>3.1 நிதி சார் விளைவுகள் | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மிகை ரூபா 10,588,436 வாக இருந்ததுடன் இதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 61,151,399 ஆக இருந்தமையினால் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நிதி விளைவுகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 50,562,963 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானம் ரூபா 3,744,687 வினால் அதிகரித்திருக்கையில் அங்கத்துவ மற்றும் ஓய்வூதியக் கணக்குகளுக்கான வட்டிச் செலுத்துகைகள் முறையே ரூபா 50,780,030 இனாலும் ரூபா 1,569,872 இனாலும் அதிகரித்தமையும் ஓய்வூதிய நிதியச் சீராக்கம் ரூபா 452,266 இனால் அதிகரித்தமை போன்ற விடயங்கள் அந்த வீழ்ச்சி தொடர்பாக விசேடமாக தாக்கம் செலுத்தியிருந்தது. | இணங்கப்படுகின்றது. | நிதிசார் விளைவுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணங்குகின்றது. |
| 4. செயற்பாட்டு மீளாய்வு<br><br>4.1 செயலாற்றுகை | (அ) 1999 செப்டெம்பர் 01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தின் மீளாய்வுக்குட்படும் ஆண்டு முடிவடையும்போது ஓய்வூதியம் பெறும் ஓய்வுபெற்றோரின் எண்ணிக்கை 121 ஆக இருப்பதுடன் அவர்களுக்காக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகை ரூபா | இணங்க முடியாது.<br><br>ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியமானது பொது ஓய்வூதிய நிதியத்தில் இருந்து செலுத்தப்படுவதுடன் இந்த பொது ஓய்வூதிய நிதியத்திற்கு வருடாந்தம் | ஓய்வூதிய நிதியத்திற்கு வரவு வைக்கப்படும் பங்களிப்புத் தொகையானது 1999 ஆம் ஆண்டு உயிர் தரவுகள் கணிப்பீட்டாளரின் சிபாரிசின் பிரகாரமே |

| | | | |
|---|---|---|---|
| | 17,495,086 ஆகும். மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் ஓய்வூதிய நிதியத்தின் செலவுக்கான மீதி ரூபா 78,674,647 ஆக இருந்ததுடன் அந்த மீதியினால் எதிர்காலத்தில் நிலவும் பொறுப்புக்களை கவனத்திற் கொள்ளாத போதிலும்கூட சுமார் 4 ½ வருட காலத்திற்கு மாத்திரமே ஓய்வூதியம் செலுத்த முடியுமாக இருக்கும். | வரவுவைக்கப்படும் மிகை காரணமாக நிதியமானது மேலும் விருத்தியடைகின்றது. மேலும் கூட்டு வருமானத்தையும் இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். | கணக்கிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கான உயிர் தரவுகள் கணிப்பீட்டாளரின் அறிக்கையின் சிபாரிசு முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக் குழு பெற்றுக்கொடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| | (ஆ) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் ஓய்வூதியம் பெறுவோரின் தனிப்பட்ட கணக்குகளில் மீதி இல்லாதபோதிலும் ரூபா 1,755,904 தொகை 15 அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கணக்குகளில் தனிப்பட்ட மீதி இல்லாத போதிலும் ஓய்வூதியம் செலுத்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 400% இனால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமும் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1,105% இனால் அதிகரித்திருந்தது. | (2012.12.31 ஆம் திகதியன்று கூட்டு வருமானம் ரூபா 212,495,036/= ஆகும்)<br><br>1999 ஆம் ஆண்டில் இருந்து ஓய்வூதிய நிதியத்தில் வரவு வைக்கப்படும் பங்களிப்புத் தொகையானது உயிர் தரவுக் கணிப்பீட்டாளரின் சிபாரிசின் பிரகாரமே கணக்கிடப்பட்டுள்ளதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டே தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | மேலும், மொத்த ஊழியர்களையும் கவனத்திற் கொண்டே ஓய்வூதிய நிதியம் நிறுவப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மொத்த நிதியமும் விருத்தியடையும் என்பது தெளிவாகும். |
| 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள் | 1999 யூன் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஓய்வூதிய நிதியத்தின் செலவினங்களாகவட்டி,கணக்காய்வுக் கட்டணம் மற்றும் வங்கிக் கட்டணங்கள் மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்ததுடன் ஏனைய நிர்வாக மற்றும் ஏனைய | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியமானது 1978 இன் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் படி அதன் நிர்வாக நடவடிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குரியதாக | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியமானது 1978 இன் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் படி அதன் நிர்வாக நடவடிக்கைகள் பல்கலைக்கழக |

| | | | |
|---|---|---|---|
| | செலவினங்கள் ஓய்வூதிய நிதியத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | இருப்பதனால் நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும். | மானியங்கள் ஆணைக் குழுவுக்குரியதாக இருப்பதனால் நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மேற்கொள்ளும். |
| 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பற்றி நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் ஈர்க்கப்படல் வேண்டும்.<br><br>(அ) ஓய்வூதியம் செலுத்துதல்<br><br>(ஆ) ஓய்வூதிய முறை மதிப்பீடு | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் காலத்துக்குக் காலம் பின்னூட்டலுக்கு உட்படுத்தப்பட்டு தேவையான சீர்படுத்துகைகள் மேற்கொள்ளப்படும். | காலத்துக்குக் காலம் பின்னூட்டலுக்கு உட்படுத்துவதன் கீழ் தேவையான சந்தர்ப்பங்களில் ஆலோசனைக் கோவை வெளியிடப்படும். |

## பல்கைலக்கழக சேமநல நிதியம்
## 2012 டிசெம்பர் 31ல் நிதி நிலைக் கூற்று

| | வருடம் 2012 ரூபா | வருடம் 2011 ரூபா |
|---|---|---|
| **நடைமுறையில்லா சொத்துக்கள்** | | |
| நீண்ட கால முதலீடுகள் | 15,612,171,387 | 13,581,720,288 |
| கடன்கள | 4,174,979,575 | 4,031,338,395 |
| | 19,787,150,962 | 17,613,058,683 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்புக்கள் | 137,247 | 93,427 |
| பெறவேண்டிய வருமானம் | 1,692,094,329 | 1,269,239,876 |
| பெறவேண்டிய பங்களிப்புக்கள் | 133,563,334 | 111,913,193 |
| பெறவேண்டியகடன் தவணைப்பணம் | 28,831,961 | 23,218,056 |
| ஏனை முற்பணங்கள் | 1,000 | 1,000 |
| காசும் & காசுக்குச் சமமானவையும் | 5,107,417 | 13,435,521 |
| | 1,859,735,288 | 1,417,901,073 |
| **கழி- நடைமுறை பரிப்புக்கள்** | | |
| வரி | 123,550,316 | 103,109,648 |
| கடன்கொடுநர்கள்Creditors | 429,456 | 405,886 |
| மீள் செலுத்தல் | 20,732,015 | 20,107,753 |
| செலுத்த வேண்டிய வாழ்க்கை செலவு படிகள் கொடுப்பனவு | 270,399,312 | 0 |
| செலுத்த வேண்டிய முத்திரை வரி | 37,050 | 19,075 |
| | 415,148,149 | 123,642,362 |
| **தேறிய நடைமுறை சொத்துக்கள்** | 1,444,587,139 | 1,294,258,711 |
| **முழுத் தேறிய சொத்துக்கள்** | 21,231,738,101 | **18,907,317,394** |
| **பபிரதிநதிப்படுததல்** | | |
| உறுபினா் மீதிகள் | 20,832,082,627 | 18,501,983,566 |
| நடைமுறையற்ற உறுப்பினர் கணக்கிற்கான ஏற்பாடுகள் | 3,000,000 | 8,000,000 |
| வட்டி வீதங்களை சமன்படுத்தும் ஒதுக்கங்கள் | 0 | 281,650,220 |
| தக்கவைத்துள்ள இலாபம் | 396,655,475 | 115,683,608 |
| **நிதியத்தின் தேறிய பெறுமதி** | 21,231,738,102 | **18,907,317,394** |

ஒப்பம். திஸ்ஸ நந்தசேன
செயலாளர்

ஒப்பம். உபயகுலா ரணவீர
கணக்காளர்

பல்கலைக்கழக சேமலாப நிதியம்
2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான
நிதி செயற்றிறன் கூற்று

| | வருடம் 2012 ரூபா | வருடம் 2011 ரூபா |
|---|---|---|
| வருமானம் | | |
| முதலீட்டு வருமானம் | 1,751,143,838 | 1,560,635,215 |
| கழி:- வருமான வரி | (140,091,507) | (124,850,817) |
| **மொத்த அறுதி வருமானம்** | 1,611,052,331 | 1,435,784,398 |
| செயற்பாட்டு செலவீனம் | (123,770) | (175,141) |
| **செயற்பாடுகளிலிருந்து இலாபம்** | 1,610,928,561 | 1,435,609,257 |
| **கூட்டுக:- ஒதுக்கங்களிலின் ஓதுக்கம்** | | |
| வட்டி வீத சமன்படுத்தும் ஒதுக்கம் | 281,650,220 | (144,706,452) |
| நடைமுறையிலில்லாத உறுப்பினருக்கான ஏற்பாடுகள் | 5,000,000 | (3,000,000) |
| வருமானத்திற்கான சீராக்கங்கள் | 9,030,091 | 8,650,171 |
| கடந்த வருடத்தின் தக்கவைத்த இலாபம | 115,683,608 | 69,847,336 |
| **பகிர்ந்தளிக்கக்கூடிய வருமானம்** | 2,022,292,480 | 1,366,400,312 |
| உறுப்பினர் மீதிகளின் வட்டி | (1,623,471,262) | (1,247,223,701) |
| நடைமுறையற்ற கணக்குகளுக்கான வட்டி | (2,047,720) | (3,493,003) |
| **மீதி மு.கொ.** | 396,773,498 | 115,683,608 |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்
## 2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான
## காசுப் பாய்ச்சல் கூற்று

| | வருடம் 2012 (ரூபா) | வருடம் 2011 (ரூபா) |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சு | | |
| முதலீடுகளிலிருந்து வருமானம் | 1,751,143,839 | 1,560,635,215 |
| உறுப்பினர் கணக்குகளில் வருவுவைக்கப்பட்ட வட்டி | (1,625,518,982) | (1,250,716,704) |
| ஏனைய கொடுப்பனவுகள் | (123,770) | (175,141) |
| **செயற்பாடு நடவடிக்கைகளிலிருந்து தேறிய உள்வரவு காசு / (வெளியேறு)** | 125,501,087 | 309,743,370 |
| **சொத்துக்களின் (அதிகரிப்பு) குறைவு** | | |
| இருப்புக்கள் | (43,820) | 1,322 |
| பெறவேண்டிய பங்களிப்புக்கள் | (21,650,141) | (28,500,259) |
| பெறவேண்டிய கடன் தவணைக் கட்டணங்கள் | (5,613,905) | (2,875,536) |
| பெறவேண்டிய வட்டி | (422,972,477) | (400,374,900) |
| பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதிம் கடன் | (143,641,180) | (232,578,936) |
| **பொறுப்புக்களின் (குறைவு) அதிகரிப்பு** | | |
| Cola | 270,399,312 | |
| கடன்கொடுத்தோர்கள் | 23,570 | 151,342 |
| செலுத்தப்படாத மீள் அளிப்புக்கள் | 624,262 | 3,382,331 |
| முத்திரை வரி | 17,975 | (15,375) |
| | **(322,856,404)** | **(660,810,011)** |
| வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | **(197,355,317)** | **(351,066,641)** |
| வருடத்தில் செலுத்திய வருமான வரி | **(119,650,840)** | **(131,655,503)** |
| | **(317,006,157)** | **(482,722,144)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| திறைசேரி முறிகள் | 2,886,249,517 | (484,925,065) |
| காப்புறுதி முறிகள | 4,999,384 | 0 |
| நிலையான வைப்பீடுகள் | (4,921,700,000) | (595,870,000) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | **(2,347,457,256)** | **(1,080,795,065)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| உறுப்பினர்களின் மீதியில் அதிகரிப்பு | 2,330,099,061 | 1,595,345,513 |
| வருமானத்தில் சீராக்கல்கள் | 9,030,091 | 8,650,171 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | 2,339,129,152 | 1,603,995,684 |
| காசும், காசிற்கு சமமானவைகளினதும் தேறிய அதிகரிப்பு | **(8,328,104)** | **40,478,475** |
| வருட ஆரமபத்திலுள்ள காசும், காசிற்கு சமமானவையும் | 13,435,521 | (27,042,954) |
| **வருட இறுதியல் காசும், காசிற்கு சமமானவையும்** | **5,107,417** | **13,435,521** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No: EC/B/UPF/FA/2012
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 16 January 2014

Chairman,
University Grants Commission

UNIVERSITY GRANTS COMMISSION
21 JAN 2014
CHAIRMAN

**Report of the Auditor General on the Financial Statements of the Universities Provident Fund for the year ended 31 December 2012**

---

Reference to my letter of even number dated 11 October 2013 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.A.S.Samaraweera
Auditor General.

Copies to : 01. Secretary , Ministry of Higher Education
02. Secretary, Ministry of Finance and Planning

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: ஈசீ/பீ/யூபீஎப;/எப்ஏ/2012 ඔබේ අංකය / உமது இல / Your No. දිනය / திகதி / Date: 2013 ஒக்டோபர் 11

தலைவர்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**இந்த அறிக்கையின் 2.2 ஆம்** பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுத் தொகுதியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் மீதி ரூபா 20,832,082,627 தொகையானதுடன் இதில்

உள்ளடக்கப்பட்ட ரூபா 6,851,305 தொகையான இனங்காணப்படாத மீதி இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான ரூபா 8,000,000 தொகையான செயற்பாடற்ற அங்கத்துவ ஒதுக்கக் கணக்கின் மீதியில் இருந்து ஆண்டின் போது முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 05 மில்லியன் தொகை ஒதுக்கம் எனும் பெயரில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) நிலுவையாகவுள்ள வாழ்க்கைச் செலவுப் படிப்பணத்தைத் தீர்ப்பதற்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 500 மில்லியன் தொகையில் ரூபா 270.4 மில்லியன் தொகைக்குரிய நிலுவையான வாழ்க்கைச் செலவினப் படிப்பணம் கணிக்கப்பட்டு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்துவக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது செலுத்தப்பட வேண்டிய கணக்காகக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 20,732,055 தொகையான செலுத்த வேண்டிய சேமலாப நிதிய (Refunds Payable) மீதியானது சேவை பூர்த்தியாகியிருந்த போதிலும் அங்கத்துவ நிதிக்காக உரிமை கோரப்படாத மீதிகளின் கூட்டுத்தொகையால் உருவாகியிருந்தது. இம் மீதிகளுக்காக வரையப்பட்ட காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 19,437,750 தொகை 01 முதல் 11 வருடங்கள் வரை காலாவதியாகிய காசோலைகளின் பெறுமதி தொடர்பாக பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 93 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பெறப்படும் வட்டி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அங்கத்துவக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 41,600 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியின் காலப்பகுப்பாய்வு 03 முதல் 09 ஆண்டுகள் வரை பரந்து காணப்பட்டது.

**2.2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகாமை**

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கல்விசார் படிகள் மொத்த உழைப்புகள் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கி 2013 சனவரி 08 ஆம் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த சுற்றறிக்கை வழங்கப்படுவதற்கு முன்னர் கல்விசார் படிகள் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 217.49 மில்லியன் தொகையான பங்களிப்பைத் தீர்ப்பதற்கோ அல்லது முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 91 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டின் போது ஊழியர் சேமலாப நிதியத்தின் முறையே ரூபா 1,610,934,308 தொகையும் ரூபா 1,625,642,752 தொகையுமான வருமானமும் செலவினமும் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்தை முறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழுவால் விதிக்கோவைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2001 பெப்ரவரி 02 ஆம் திகதிய 3/2001 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | ஏதேனுமொரு மாதத்திற்குரிய சேமலாப பங்களிப்புப் பணம் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அந்நாளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தாலும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களாலும் மாதத்திற்கான சகல காசோலைகளும் குறித்த தினத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவா எனவும் அக் காசோலைகள் தாமதமின்றி வங்கியிலிடப்பட்டதா எனவும் இனங்காணப்படுவதற்காக முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை என்பது கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 2,022,174,457 ஆகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 1,366,400,312 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 655,774,145 தொகையான முன்னேற்றத்திற்கு முதலீட்டு வருமானம் ரூபா 190,390,600 தொகையால் அதிகரித்தமையும் வட்டி வீதம் சமப்படுத்தல் ஒதுக்கக் கணக்கு (Interest rate Equalization Reserve) மற்றும் செயற்பாடற்ற அங்கத்துவ ஒதுக்கக் கணக்கிலிருந்து முறையே ரூபா 281,650,220 தொகையும் ரூபா 5,000,000 தொகையும் மீண்டும் வருமானத்திற்கு எடுப்பட்டமையும் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் செலவினமாக வட்டி, கணக்காய்வுக் கட்டணங்கள், வங்கிக் கட்டணங்கள் மற்றும் காகிதாதிகள் மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்ததுடன் ஏனைய நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் சேமலாப நிதியத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயற்பாட்டுத்திட்டம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நிதியமாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுத்திட்டத்தில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. 2011/ 2012 செயற்பாட்டுத்திட்டத்தின் படி மருத்துவக் காப்புறுதி முறையொன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) அங்கத்துவ நிதியப் பெறுவனவு மற்றும் விடுவிப்பு

(ஆ) காசு மற்றும் வங்கி

எச்.ஏ.எஸ் சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

*Ms/v*

**2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**



| தொடர்பு | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதில்களும் கருத்துரைகளும் | 28.02.2014 இல் உள்ளவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| **2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்** | | | |
| **2.2.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்** | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுத் தொகுதியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின்படி, 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனக் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2013ம வருட நிதி கணக்குகளுடன் உரிமையில் மாற்றங்கள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்** | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் மீதியாக ரூபா 20,832,082,627 தொகை உள்ளது. இம் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,851,305 இனங்காணப்படாதிருப்பதுடன், இது தொடர்பான கணக்குகளில் சீராக்கப்படவுமில்லை. | **(அ) <u>ரூபா 6,851,305 இனங்காணப்படாத மீதி</u>**<br><br>இது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவால் புலனாய்வு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | குழுவின் அறிக்கை பெறப்பட்டிருப்பதுடன், அதன் சிபார்சு ஆணைக்குழுவின் அனுதியுடன் நடைமுறைப்படுத்தப்படும். |
| | (ஆ) 2012 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான ரூபா 8,000,000 தொகையான செயற்பாடற்ற அங்கத்துவ ஒதுக்கக் கணக்கின் மீதியில் இருந்து இவ் ஆண்டில முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 05 மில்லியன் தொகை ஒதுக்கம் எனும் பெயரில் வருமானத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது. | **(ஆ) ரூபா 8,000,000 செயற்பாடற்ற உறுப்புரிமை ஒதுக்கக் கணக்கு**<br><br>இறுதிக் கணக்குகள் அங்கீகாரத்திற்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த விடயங்கள் அங்கீகாரத்திற்கும் உட்படுத்தப்பட்டன. | 21.03.2013ல் இடம் பெற்ற 870ம் ஆணைக்குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | (இ) நிலுவையாகவுள்ள வாழ்க்கைச் செலவுப் படிப்பணத்தைத் தீர்ப்பதற்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 500 மில்லியன் தொகையில் ரூபா 270.4 மில்லியன் தொகைக்குரிய நிலுவையான வாழ்க்கைச் செலவினப் படிப்பணம் கணிக்கப்பட்டு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்துவக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது செலுத்தப்பட வேண்டிய கணக்காகக் கணக்கிடப்பட்டுள்ளது. | **(இ) ரூபா 270.4 மில்லியன் செலுத்த வேண்டிய நிலுவையாகவிருக்கின்ற வாழ்க்கைச் செலவுப்படி**<br><br>பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு நிலுவையாகவுள்ள விபரங்களை உயர் கல்வி நிலையங்கள் அனுப்பியுள்ளன. அவற்றைக் கணக்காய்வு செய்து உறுப்பின் கணக்குகளில் கணக்கிலடப்பட்டுள்ளன. மீதித் தொகை செலுத்த வேண்டிய கணக்காக கணக்கிலடப்பட்டுள்ளது. | உ.க.நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கணக்கீட்டின் படி 2013ம் வருடத்தில் வாழ்க்கைச் செலவுப்படியின் பங்களிப்பு நிலுவை உறுப்பினர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 31.12.2013 அன்று செலுத்த வேண்டிய நிலுவை ரூபா. 153.3 மில்லியன். |

| தொடர்பு | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதில்களும் கருத்துரைகளும | 28.02.2014 இல் உள்ளவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள் | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) சேமலாப நிதியில் மீள் செலுத்தப்படவேண்டிய மீதியான ரூபா. 20இ732இ055இ சேவைகள் நிறுத்தப்பட்டாலும் உறுப்புரிமை நிதிகளில் கோரப்படாத மொத்தத் தொகையாகவுள்ளது. இந் நிலுவைகளுக்காக வரையப்பட்ட காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டாலும். ரூபா. 19,437,750 பெறுமதியான காலாவதியான இக் காசோலைகள் தொடர்பாக பல்கலைக்கழக சட்டத்தின் 93ம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்படாது கிடையாகவுள்ளது. பெறப்படும் வட்டி அரச வருமானத்திற்கு வரவிலிடப்படாது, உறுப்பினர் கணக்கில் வரவிலிடப்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டுள்ளது. | (அ) உடன்படவில்லை.<br>பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 93(1) ஆம் பிரிவின்படி கோரப்படாத மீதிகள் தொடர்பில் கணக்கினைப் பூர்த்தியாக்கம் வேளை, மீதியையும் அவற்றின் மீதான வட்டியும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், கணக்கினை பூர்த்தியாக்கும் திகதியிலிருந்து உறுப்புரிமை கோரப்படாமல் இருக்கையில் வட்டி கணிக்கப்பட்டிருக்கவில்லை அதேநேரம், வட்டியானது உறுப்பினர் க்ணக்கிற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கோ செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | |
| | (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 41,600 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியின் காலப்பகுப்பாய்வு 03 முதல் 09 ஆண்டுகள் வரை பரந்து காணப்பட்டது. | (ஆ)ரூபா. 41,600.`.ஸ்ரீ இரண்டு உயர் கல்வி நிலையங்களுக்கு கடன் மீதி செல்மதியாகும். ஆனால் இவ் உ.க.நிறுவனங்கள் அவ்வாறான தொகை கடனாகவில்லையென அறிவித்துள்ளன. ஆகவே இத்தொகையினை 2013ல் வருமானமாகப் பதிய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வுக் குழுவின் சிபார்சின்படி 2013ல் வரவிற்கு மீள் பதியப்பட்டது. |

| தொடர்பு | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதில்களும் கருத்துரைகளும் | 28.02.2014 இல் உள்ளவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2.2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகாமை | சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கான தொடர்பு | | |
| (அ) 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | (அ) 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கல்விசார் படிகள் மொத்த உழைப்புகள் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கி 2013 சனவரி 08 ஆம் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேற்குறித்த சுற்றறிக்கை வழங்கப்படுவதற்கு முன்னர் கல்விசார் படிகள் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 217.49 மில்லியன் தொகையான பங்களிப்பைத் தீர்ப்பதற்கோ அல்லது முறையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | (அ) அமைச்சரவை பத்திரம் மேற்குறிப்பிட்ட சகல விடயங்களையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவின் அனுமதியுடன் அமைச்சரவைப் பத்திரம் உயர் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| தொடர்பு | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதில்களும் கருத்துரைகளும | 28.02.2014 இல் உள்ளவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| | **கட்டளைச் சட்டம்** | | |
| (ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 91 ஆம் பிரிவு, | 2012 ஆம் ஆண்டினல் ஊழியர் சேமலாப நிதியத்தின் முறையே ரூபா 1,610,934,308 தொகையும் ரூபா 1,625,642,752 தொகையுமான வருமானமும் செலவினமும் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்தை முறைப்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழுவால் விதிக்கோவைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | (ஆ) வரைவுக் கட்டளைச் சட்டம் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வரைவுக் கட்டளைச் சட்டம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் அவதானத்தின் கீழுள்ளது. |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2001 பெப்ரவரி 02 ஆம் திகதிய 3.'.2001 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | ஏதேனுமொரு மாதத்திற்குரிய சேமலாப பங்களிப்புப் பணம் அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் அல்லது அந்நாளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தாலும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களாலும் மாதத்திற்கான சகல காசோலைகளும் குறித்த தினத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவா எனவும் அக் காசோலைகள் தாமதமின்றி வங்கியிலிடப்பட்டதா எனவும் இனங்காணப்படுவதற்காக முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை என்பது கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. | (இ) பல்கலைக்கழகத்தால் மற்றும் உயர் கல்வி நிறுவனத்தால் உரிய மாதத்திற்காக சேமலாப நிதியப் , பங்களிப்பகள் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் காசோலைகள் அனுப்புவதற்கும் கடனை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றன.<br><br>மேலும் 11 மணிக்கு முன்னர் சேமலாப நிதியத்திற்கு பெறப்பட்ட காசோலைகள் அதே நாள் வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்டதுடன் 11 மணிக்குப் பின்னர் பெறப்பட்ட காசோலைகள் கட்டாயமாக அடுத்தநாள் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வழமையான முறை மேற்பார்வை உத்தியோகத்தரால் பின்னப்றப்பட்டுள்ளது. | உள்ளகக் கட்டுப்பாட்டு செயல்முறைகள் தகுந்தவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது. |

| தொடர்பு | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதில்களும் கருத்துரைகளும | 28.02.2014 இல் உள்ளவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 3. நிதி மீளாய்வு<br>3.1 நிதி விளைவுகள் | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 2,022,174,457 ஆகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 1,366,400,312 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 655,774,145 தொகையான முன்னேற்றத்திற்கு முதலீட்டு வருமானம் ரூபா 190,390,600 தொகையால் அதிகரித்தமையும் வட்டி வீதம் சமப்படுத்தல் ஒதுக்கக் கணக்கு (ஐவெநசநளவ சயவந நுஙரயடணையவழைெ சுநளநசஎந) மற்றும் செயற்பாடற்ற அங்கத்துவ ஒதுக்கக் கணக்கிலிருந்து முறையே ரூபா 281,650,220 தொகையும் ரூபா 5,000,000 தொகையும் மீண்டும் வருமானத்திற்கு மீள் எடுக்கப்பட்டமையும் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன. | உடன்பட்டது | |
| 4. செயற்பாட்டு மீளாய்வு<br>4.1 செயலாற்றல் | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்காக நிறுவப்பட்ட பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் செலவினமாக வட்டி, கணக்காய்வுக் கட்டணங்கள், வங்கிக் கட்டணங்கள் மற்றும் காகிதாதிகள் மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்ததுடன் ஏனைய நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் சேமலாப நிதியத்தின் கீழ் கணக்கிடப்படவில்லை. | பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டதுடன், இதன்படி நிதியத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அத்தகைய நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன. | நிர்வாக மற்றும் ஏனைய செலவீனங்கள் ப.ஆ.குழு செயகத்தினால் செலவிடப்பட்டன. |

| தொடர்பு | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதில்களும் கருத்துரைகளும | 28.02.2014 இல் உள்ளவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| **5. பொறுப்புக்கூறலும் நல்லாளுகையும்** | | | |
| **5.1 செயற்பாட்டுத் திட்டம்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்பட்ட நிதியமாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுத் திட்டத்தில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன. 2011.'. 2012 செயற்பாட்டுத்திட்டத்தின் படி மருத்துவக் காப்புறுதி முறையொன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் கீழ் ஊழியர்களிற்காக மருத்துவ காப்புறுதி திட்டமொன்று தொடங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இது தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதுடன், குழுவின் சிபார்சின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| **6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.<br><br>(அ) அங்கத்துவ நிதியப் பெறுப்பனவு மற்றும் விடுவிப்பு<br><br>**(ஆ)** காசு மற்றும் வங்கி | (ஐ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உறுப்புரிமை கட்டணங்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(ஐை) **காசு மற்றும் வங்கி**<br><br>காசு மற்றும் வங்கி செயற்பாடுகள் வழமையாக மேற்கொள்ளப்படுகின்றன என நாங்கள் தயவுடன் தெரிவிக்கின்றோம். | பங்களிப்பை பெறல், நிதிகளை செலுத்தல் மற்றும் நடவடிக்கைகள் தகுந்தவாறு எடுக்கப்பட்டுள்ளன. |